பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 06 வியாழக்கிழமை 20.06.2024 கதிர் 225

### பாலினச் சட்ட மூலம் குறித்த நீதிமன்ற முடிவிற்கான

# ஜனாதிபதியின் எதிர்ப்பில் இருக்கிறது உள்நோக்கம்

### நாடாளுமன்றத்தில் எடுத்து விளக்கினார் சுமந்திரன்

பாலினச் சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழுங்கிய தீர்ப்பினை எதிர்த்து ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை, ஜனாதிபதியின் பதவிக் காலத்தை நீடிப்பதை உள்நோக்கமாகக் கொண்டது என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ☞2

## இனி இது ரகசியம் அல்ல!

சுதந்திரக் கட்சியின் அக்கப்போர் இன்னும் ஒரு முடிவுக்கு வந்த பாடில்லை. கட்சியை யார் வைத்திருப்பது என்பது தொடர்பில் மைத்திரி அணிக்கும் சந்திரிகா அம்மையார் தலைமையிலான அரச தரப்பு அமைச்சர்கள் அணிக்கும் இடையில் நடக்கும் இந்தப் போராட்டத்தின் ஒரு பகுதி நீதிமன்றத்தில் நடக்கின்றது என்றால், மற்றைய பகுதி தொடர்ந்தும் தலைவர் தெரிவு, நிர்வாகிகள் தெரிவு என்று நீதிமன்றத்திற்கு வெளியேயும் நடக்கின்றது.

நேற்று கொழும்பில் நேற்று இடம்பெற்ற சந்திரிகா அம்மையார் அணியினரின் நிறைவேற்றுக் குழுவால் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவும், பொதுச்செயலாளராக நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திசாநாயக்கவும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

முன்னதாக, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் ஏப்ரல் 8 அன்று இலங்கை மன்றக்கல்லூரியில் இடம்பெற்ற, கட்சியின் அரசியல் பீடக் கூட்டத்தின்போது நிமால் சிறிபால டி சில்வா, பதில் ☞2

## மத்திய வங்கி அதிகாரிகள் பதவி விலகவேண்டும்

### எதிர்க் கட்சி பிரதம கொறடா வலியுறுத்து

மத்திய வங்கியின் முறையற்ற செயற்பாடுகள் வெளிப்பட்டுள்ளது. ஆகவே மத்திய வங்கியின் உயர் அதிகாரிகள் உடன் பதவி விலக வேண்டும் என்று எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவும் ஐக்கிய மக்கள்ச சக்தியின் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின் போது ஒழுங்குப்பிரச்சினையை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

நாடு வங்குரோத்து நிலையடைந்துள்ள போது மத்திய வங்கியின் சேவையாளர் களின் சம்பளம் 75 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதை நாங்களே முதலில் வெளிப்படுத்தினோம். அரசாங்கம் வானத்தை பார்த்துக் கொண்டிருந்தது. முறையற்ற ☞8

## மத்திய வங்கி ஊழியர் சம்பள அதிகரிப்பு தவறான தீர்மானம்

### ஜனாதிபதி நியமித்த குழு அறிக்கை

மத்திய வங்கி ஊழியர்களின் சம்பளம் கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் அதிகரிக்கப்பட்டது தவறு என்று அது தொடர்பில் ஆராய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அரச நிதி தொடர்பான தெரிவுக்குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா நாடாளுமன்றத்தில் நேற்று இதனைத் தெரிவித்தார்.

மத்திய வங்கியின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட தெரிவுக் ☞2

## தொழில்துறைக்கு உதவ புதிய அபிவிருத்தி வங்கி

### ஜனாதிபதி அறிவிப்பு

இலங்கையில் தொழில்துறையினருக்கு நிதியுதவி வழங்க புதிய அபிவிருத்தி வங்கியொன்று உருவாக்கப்பட உள்ளதாகவும், இதன் மூலம் தொழில்துறையினருக்கு குறைந்த வட்டிவிகிதத்தில் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு கிட்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கையில் முதன்முறையாக ஒழுங்குசெய்யப்பட்டுள்ள இன்டர்நெசல் இன்டஸ்ரியல் எக்ஸ்போ- 2024 (சர்வதேச கைத்தொழில் கண்காட்சி) நேற்று ஆரம்பமானது. இந்தக் கண்காட்சியைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். ☞8

## இழுவைமடியை சட்டபூர்வமாக்க அமைச்சரின் நடவடிக்கை தேவை

### எதிர்க் கட்சித் தலைவர் நாடாளுமன்றில் வலியுறுத்து

இழுவைமடியை சட்டபூர்வமாக்க மீன்பிடித்துறை அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் சபையில் வேண்டுகோள் விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கேள்வியொன்றை முன்வைத்து ☞2

## நாரா நிறுவனத்தின் ஆய்வுக்கு ஏற்பவே இழுவைமடிக்கு சில இடங்களில் அனுமதி

### இப்படி விளக்கமளிக்கிறார் அமைச்சர் டக்ளஸ்

நாரா நிறுவனத்தின் ஆய்வுக்கு பின்னர் எந்தெந்த பகுதிகளில் செய்யலாம் என்று கூறி தீர்மானிக்கப்பட்டதுடன் அந்த இடங்களில் மென் இழுவைவலைக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எல்லா இடங்களிலும் வழங்கப்படவில்லை என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச யாழ் மாவட்ட மீனவர்கள் எதிர்கொண்டுவரும் பிரச்சினைகள் தொடர்பாக முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் மீதான எதிர்க்கட்சித் தலைவரின் அக்கறைக்கு நன்றி தெரிவிக்கிறேன். அந்த மீனவர்கள் இறங்குதுறையொன்று கேட்டிருப்பதாக உங்களின் கேள்வி அமைந்திருந்தது.

அது தொடர்பான கோரிக்கை இதுவரையில் என்னிடம் விடுக்கப்படவில்லை. வான்தோண்டுவது தொடர்பிலேயே கேட்டிருந்தார்கள். இம்முறை வட மாகாணத்துக்கு ஜனாதிபதி 500 மில்லியனை ஒதுக்கியுள்ளார். அந்தவகையில் அந்த வான்தோண்டும் வேலைகள் அடுத்த மாதமளவில் ஆரம்பிக்கப்படும்.

இதேவேளை இழுவை மடிவலை தொடர்பாக 2018 ஆம் ஆண்டு ☞8

## பெருங்கற்கால பண்பாட்டை தேடி ஆனைக்கோட்டையில் ஆய்வுகள்

### இன்று தொடங்குகின்றன

பெருங்கற்காலப் பண்பாட்டை விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கக் கூடிய வகையிலான சான்றுகள் கிடைக்கப்பெறும் என நம்பப்படும் ஆனைக் கோட்டையில், இன்று வியாழக்கிழமை 9 மணிக்கு அகழ்வாராய்ச்சிப்பணிகள் ஆரம்பிக்கப் படவுள்ளன என்று ☞8

## பௌத்த மத அவமதிப்பு வழக்கு நடாஷா, புரூனோ விடுவிப்பு

பௌத்த மதத்தை அவமதிக்கும்வகையில் கருத்துக்களை வெளியிட்டதாக தொடரப்பட்ட வழக்கில் இருந்து நகைச்சுவை கலைஞரான நடாஷா எதிரிசூரிய மற்றும் எஸ்எல் விலொக் (ரீஸி ஙாஸிநுறா) யூடியூப் சேனலின் உரிமையாளர் ☞2

## தெற்கில் புதிய அரசியல் இயக்கம் ‘அரகலய’ போராளிகளால் ஆரம்பம்



### மக்கள் போராட்ட முன்னணி என்பது பெயர்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை அடிப்படையாக அரகலய போராட்ட குழுவினர் மக்கள் போராட்ட முன்னணி என்ற புதிய அரசியல் இயக்கத்தினை ஆரம்பித்துள்ளனர்.

முன்னாள் மாணவ செயற்பாட்டாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களை உள்ளடக்கி மக்கள் போராட்ட முன்னணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு 7, வித்யா மாவத்தையிலுள்ள 'சிங்க சமாஜ' மத்திய நிலையத்தில் நேற்று நடைபெற்ற ☞2

## சாஹிரா மாணவிகளின் பெறுபேறுகள் விரைவில்

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

திருகோணமலை சாஹிரா கல்லூரி மாணவிகளின் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் விரைவில் வெளியிடப்படும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய இடையீட்டு கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் தனது ☞8

## இனி இது .....

தலைவராகவும், துமிந்த திசாநாயக்க பதில்செயலாளராகவும் நியமிக்கப்பட்டிருந்தனர். எனினும் அதற்குஎதிராகமைத்திரிஅணியினர் நீதிமன்றத்தில் இடைக்காலத் தடை உத்தரவு பெற்றிருந்தனர்.

இந்தஅணியினரின்முயற்சிக்குப் பதிலடியாகமைத்திரிஅணியினர்நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவை கட்சியின் தலைவராகத் தெரிவு செய்திருந்தனர். அவருக்கு எதிராக சந்திரிகாஅணியினர்நீதிமன்றத்தில் இடைக்காலத் தடை உத்தரவு பெற்றிருந்தனர். இதற்கிடையில் இந்தகுளறுபடிகள்எல்லாவற்றுக்கும் முன்னோடியான கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேனவிற்கு எதிராக சந்திரிக்கா அம்மையாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சுதந்திரக் கட்சியின் தலைவராக மைத்திரி செயற்படுவதைத் தடுத்து பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடையுத்தரவு ஒகஸ்ட் 1 வரை தொடர்ந்து நீடிக்கும் என்று கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்ககுமாரதுங்கவினால் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதேஇந்தஉத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

.........................................

இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்ஷங்கர் இன்று இலங்கை வருகிறார். கொழும்பிலுள்ள இந்திய உயர்ஆணையரகம் இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தப் பயணத்தின்போது அயலுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், இலங்கை ஜனாதிபதி, பிரதமர்,எதிர்க்கட்சித்தலைவர்,தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், முஸ்லிம் மற்றும் மலையகத் தலைவர்கள் ஆகியோரையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

இந்தியப் பிரதமர் மோடி 3ஆவது தடவையாகப் பிரதமராகப் பதவியேற்றுக்கொண்ட பின்னர், அயலுறவுத்துறை அமைச்சர் மேற்கொள்ளும்முதலாவதுபயணம் இதுவாகும்.

இந்தியாவின்அயல்நாடுகளுக்கு முன்னுரிமை கொள்கையினை மீள வலியுறுத்தும் இந்தப் பயணமானது, கடல்மார்க்கமாக மிகவும் நெருக்கமான அயல் நாடாகவும் காலங்காலமாக நல்லுறவைக்கொண்ட நண்பனாகவும் உள்ளஇலங்கைக்குஇந்தியாவினது தொடர்ச்சியான அர்ப்பணிப்பினை சுட்டிக்காட்டுகின்றது என்றுதூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கும்இந்தியாவிற்கும் இடையில் பாலம் அமைப்பது உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் இந்தப் பயணத்தில் ஆராயப்படவுள்ளது. தமிழ், முஸ்லிம் கட்சிகளுடான சந்திப்புக்களில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலான இந்திய நிலைப்பாடு குறிப்புணர்த்தப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஜனாதிபதியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றையதினம் ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பியதைத் தொடர்ந்துகருத்துவெளியிட்ட அவர், பாலினச் சட்டமூலம் சம்பந்தமாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பினை அமுல்படுத்தத் தேவையில்லை என்று ஜனாதிபதி இந்த சபைக்கு வருகை தந்து கூறியுள்ளார்.

ஜனாதிபதி முன்னோக்கி கொண்டுசெல்வதற்கு முயற்சிக்கும் இந்த நடைமுறை மிகவும் பாரதூரமானதாகும். அந்தச் செயற்பாடு சம்பந்தமாக எமக்கு பெரும் சந்தேகம் வருகின்றது.

குறிப்பாக நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியின் பதவிக் காலத்தினை ஐந்திலிருந்து ஆறாக மாற்றுவதற்கான யோசனை வருகின்றபோதுஉயர்நீதிமன்றத்தின் அறிவிப்பைக் கவனத்தில் கொள்ளத்தேவையில்லை என்று கூறுவதற்கான ஒருமுன்மாதிரியாக இது இருக்கலாம்.

19ஆவது திருத்தச்சட்டத்தினை மேற்கொண்டபோது அரசமைப்பின் 83 (அ) சரத்தினை எம்மால் திருத்த முடியாமல் போனமைக்கான காரணம் சர்வஜன வாக்கெடுப்பைச் செய்ய வேண்டியிருந்தமையினாலாகும்.

எவ்வாறாக இருந்தாலும் தற்போதைய ஜனாதிபதி, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் எஞ்சிய பதவிக்காலத்திற்குத்தான் பதவியில் இருக்க முடியும். அதாவது ஐந்து ஆண்டுகள்தான் அவர் பதவியில் இருக்க முடியும்.

அதேநேரம், பாலினச் சட்டமூலத்தினை நிறைவேற்றுவதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகளும், சர்வஜன வாக்கெடுப்பும் அவசியமானதாகும். ஆனால்ஜனாதிபதி மூன்றிலிரண்டு வாக்குகளை மட்டும் பயன்படுத்தி அச்சட்டமூலத்தினை நிறைவேற்றுவதற்கு முயற்சிக்கின்றார்.

அதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இலஞ்சம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதாவது, நாடாளுமன்ற உறுப்பினர்களின் முழுமையான காலத்தினை வழங்கவும் அதன் பின்னர் ஓய்வூதியத்தினை வழங்கவும் நடவடிக்கைகளை எடுக்கின்றார் ஜனாதிபதி.

உண்மையில் பாலினச் சட்டமூலத்திற்கும் ஜனாதிபதியின் செயற்பாட்டிற்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை. அவர் தனது பதவிக்காலத்தினை மையப்படுத்தியே இந்த நடவடிக்கைகளை எடுக்கின்றார். இது தொடர்பில் சபாநாயகர்விழிப்படையவேண்டும். இந்தப் பிற்போக்குத் தன்மை குறித்து விழிப்படைய வேண்டும். இதுமிகவும்ஆபத்தானவிடயமாகும்.

ஜனாதிபதிபல்வேறுவழக்குகளை முன்னுதாரணமாகக்கூறி கருத்துக்களை வெளியிட்டமையின் பின்னணி இதுதான். அரசமைப்புக்குஅமைவாகச்செயற்படவேண்டிய பொறுப்பு நாடாளுமன்றத்திற்கு உள்ளது. உயர்நீதிமன்றம் தீர்மானத்தினை வழங்கும்போது அதற்கு அமைவாகச் செயற்பட வேண்டுமென அரசமைப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே உயர்நீதிமன்றத்தின் அனுமதியின்றி சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு சபாநாயகர் கையொப்பமிட்டாலும் அது சட்டமாகாது. ஆகவே மிகவும் ஆபத்தான நடைமுறைஆரம்பிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நடைபெறவுள்ள விடயத்தினை மையப்படுத்தி உள்நோக்கத்துடனேயே ஜனாதிபதி குறித்த விடயத்தினை சபையில் கூறியுள்ளார் என்றார்.

## பௌத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புருனோ திவாகர ஆகியோர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பில்உள்ளமுன்னணிப் பாடசாலை ஒன்றில் நடைபெற்ற நகைச்சுவைநிகழ்ச்சியில், பௌத்த மதத்தை அவமதித்ததாகக் கூறி கடந்த வருடம் மே 28 ஆம் திகதி கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்துநடாஷாகுற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால்கைது செய்யப்பட்டிருந்தார்.

குறித்த சம்பவம் தொடர்பில் புருனோ திவாகர மே 31 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார். இதனைத் தொடர்ந்து குறித்த இருவருக்கும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டிருந்த நிலையில், புருனோ திவாகர கடந்த வருடம் ஜூன் 21 பிணையில் விடுவிக்கப்பட்டார். இந்நிலையில், நடாஷா கொழும்பு மேல் நீதிமன்றத்தில் மனுதாக்கல்செய்த பின்னர் ஜூலை 5 பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இதேவேளை, கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்குவதற்காக சட்டங்களை ஆயுதமாக்கும் கலாசாரத்தை இலங்கை அதிகாரிகள்நிறுத்தவேண்டும்என சர்வதேச மன்னிப்புச் சபையின் தென்னாசியபிரிவுவேண்டுகோள் விடுத்துள்ளது.

சர்வதேசமன்னிப்புச்சபையின் தென்னாசிய பிரிவு மேலும் தெரிவித்துள்ளதாவது,நகைச்சுவை நிகழ்ச்சியின்போது வெளியிட்ட கருத்துக்கள் பௌத்தமதத்தை அவமதிக்கும் விதத்தில் காணப்பட்டன என்ற குற்றச்சாட்டின் கீழ் நடாஷா எதிரிசூரியவிற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கிலிருந்து அவரை விடுதலைசெய்வது என்ற கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தின் முடிவை நாங்கள் வரவேற்கின்றோம்.

கருத்து சுதந்திரத்திற்கான உரிமையானது ஆழமாக புண்படுத்தக்கூடிய கருத்துக்கள் உட்பட அனைத்து கருத்துக்'களுக்கும் பொருந்தும் என்பதை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

வெறுப்பை பரப்புரை செய்வதற்கு எதிரான போராட்டத்திற்காக உருவாக்கப்படும் அனைத்துக் கொள்கைகளும் நடைமுறைகளும் இறுக்கமான முறையில் உருவாக்கப்பட்டு பின்பற்றப்படுவதை இலங்கை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும்.

இதன் மூலம் நியாயமற்ற கட்டுப்பாடுகள்கருத்துச்சுதந்திரத்தை முடக்கும் நடவடிக்கைகளைத் தவிர்க்கலாம். கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்குவதற்காக சட்டங்களை ஆயுதமாக்கும் கலாசாரத்தை இலங்கை அதிகாரிகள் நிறுத்தவேண்டும் என்றுள்ளது.

## இழுவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை, பொலிகண்டிஎன்றஇடத்தில் அதிகளவானமீனவர்கள்மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவருகின்றனர். என்றாலும் மீன்பிடி படகுகளுக்கு நங்கூரமிடும் வசதிகள் சரியாக ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இந்த இடத்தின் ஆழம் தோண்டி மீன்பிடி படகுகளை நங்கூரமிடுவதற்குக்கான வசதிகள் செய்து தரப்படும் என வாக்குறுதிகள் வழங்கப்பட்டாலும், அது இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை. இதுதொடர்பாக கவனம்செலுத்திஉரியநடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2017 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்ககடற்றொழில்மற்றும்நீரியல் வளங்கள் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டதன் மூலம் இலங்கைக்கடற்பரப்பில் இழுவை மடி மூலம் மீன்பிடியில் ஈடுபடுதல் முற்றாகதடை செய்யப்பட்டுள்ளது. இதனால் மீன் வளத்திற்கும், கடற்சூழலுக்கும் தீங்கு விளைவிக்கும் நிலைமைகள் ஏற்படுகின்றன.

நாட்டின் ஏனைய பகுதிகளில் இழுவைமடியைநிறுத்தமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், யாழ்ப்பாணத்தில் இது முன்னெடுக்கப்பட்டு வருகிறது. கடற்றொழில் திணைக்களம் மற்றும் துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு அறிவித்தாலும் இதற்கு தீர்வு காணப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் இழுவை மடி மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என கேட்கிறேன். இதுகுறித்துமீன்பிடித்துறை அதிகாரிகள் மௌனம் காப்பது ஏன் என்ற பிரச்சினையும் எழுகிறது. அவ்வாறு அனுமதி வழங்கப்பட்டிருக்குமானால் அது கடற்றொழில் சட்டத்தை மீறிய செயலாகும் .

எனவேஇழுவைமடியைபயன்டுத்தி மீன் பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் மீனவர்கள் அதனை சட்ட ரீதியில் மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரம்பாதிக்காதவகையில் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## பல்கலைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம் தெரிவித்தார்.

இலங்கையின் பெருங்கற்கால பண்பாடுகள் நிறைந்ததாகக் கருதப்படும் ஆனைக்கோட்டையில் அடையாளம் காணப்பட்டுள்ள ஒரு பகுதியில் இந்த அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர்களான இரகுபதி மற்றும் இந்திரபாலா ஆகியோர் 1980ஆம் ஆண்டுகளில் முன்னெடுத்த அகழ்வாய்வு மற்றும் மேலாய்வுகளில் இது பெருங்கற்கால பண்பாடு என உறுதிப்படுத்தும் வகையில் சான்றுப் பொருட்கள் கிடைக்கப்பெற்றிருந்தன.

இந்த நிலையில் புலம்பெயர் நிதிப்பங்களிப்புடன் யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம், தென்னிலங்கை தொல்லியல்துறை பேராசிரியர்கள், யாழ். பல்கலைக்கழக தொல்லியல்துறை விரிவுரையாளர்கள், தொல்லியல் பணிமனைஅதிகாரிகள்,யாழ்ப்பாண மரபுரிமை மையம் இந்த அகழ்வுகளில் பங்கெடுக்கவுள்ளனர்.

## மத்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவின் அறிக்கையை சபைக்கு சமர்ப்பித்து உரையாற்றுகையில் அவர்இதனைத்தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மத்திய வங்கியின் சம்பள அதிகரிப்பு விவகாரம் சமூக கட்டமைப்பில் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியது. இவ்விவகாரம் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகளை முன்னெடுக்குமாறுநிதியமைச்சரானஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தினோம்.இதற்கமைய தினேஷ் வீரக்கொடி தலைமையிலான விசேட குழுவை ஜனாதிபதி நியமித்தார். அர்ஜுன ஹேரத், இந்திரஜித் குமாரசுவாமி,சுதர்மாகருணாரத்ன,நிஹால் பொன்சேகா, அனுஷ்க விஜேசிங்க மற்றும் கே.வி.சி. தில்ருக்ஷி ஆகியோர் இந்த குழுவின் இணை உறுப்பினர்களாவர்.

ஜனாதிபதியால் வழங்கப்பட்ட விடயதானம் பரந்துப்பட்டது. இவற்றை ஆராய்வதற்கு போதுமான காலவகாசம் போதாது என்றுசுட்டிக்காட்டிகுழுவினர் அரச நிதி தொடர்பான தெரிவுக்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள். மத்திய வங்கியின உயர் மற்றும் கீழ்நிலை சேவையாளர்களின் சம்பளம் ஏற்றுக்கொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தம் ஊடாக அதிகரிக்கப்பட்டுள்ளமை தவறானதாகும் என்றுகுழுவினர் பரிந்துரைகளை முன்வைத்துள்ளனர்.

அத்துடன் மத்திய வங்கியின் முகாமைத்துவ உதவியாளர், அலுவலக உதவியாளர்கள் ஆகியோர்அரசசேவைத்துறையின் தர கட்டமைப்புக்குள்தான் உள்ளடங்குகிறார்கள். மத்திய வங்கியில் சேவையாற்றுவதால் இவர்களின் சம்பளத்தை விருப்பத்துக்கு அமைய அதிகரிக்க முடியாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மூன்று ஆண்டு காலத்துக்கு ஒருமுறை கூட்டு ஒப்பந்தத் துக்கு அமைய சம்பளம் அதிகரிக்கப்படுவதாக குறிப்பிடப்படுவதை குழுவினர் ஆராய்ந்துள்ளனர். 2025 ஆம் ஆண்டு மீளாய்வுகள் செய்யப்படும்போது 5 ஆண்டுகால கூட்டு ஒப்பந்தம் என்ற நிலையில் இருந்து கொண்டு தீர்மானம் எடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் மத்திய வங்கியின் சேவையாளர்களின் ஊழியர் சேமலாப நிதியம் அதிகரிக்கப்பட்டமை குறித்தும் குழுவினர் பரிந்துரைகளை முன்வைத்துள்ளனர். தற்போதைய நிலையில் இதனை செய்யாமல் இருந்திருக்க வேண்டும், ஆகவே ஊழியர் சேமலாப நிதியத்தின் வட்டி வீதம் அதிகரிக்கப்பட்டமை திருத்தம் செய்யப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பளம் அதிகரிக்கப்பட்ட போது நாட்டின் பொருளாதார நிலைமை குறித்து மத்திய வங்கி விசேட கவனம் செலுத்தியிருக்க வேண்டும் என்று குழுவினர் பரிந்துரைத்துள்ளனர். ஐந்தாவதாக முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரையில் சம்பள அதிகரிப்பு தீர்மானத்தை முழுமையாக இடைநிறுத் துமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறான தீர்மானத்தை எடுத்தால் மத்திய வங்கியின் சுயாதீன தன்மைக்கு பாதிப்பு ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரச நிதி தொடர்பான குழுவில் இந்த பரிந்துரைகவி; முழுமையாக ஆராயப்பட்டு ஐந்தாவது பரிந்துரைகளை தவிர்த்துஏனையபரிந்துரைகளை செயற்படுத்த ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. தலைவர் என்ற ரீதியில் வாக்களிப்பில் இருந்துவிலகியிருந்தேன். ஆகவே எமது பரிந்துகைளை சபைக்கு முன்வைக்கிறேன். இதனை நிதியமைச்சுக்கு சமர்ப்பித்து அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுங்கள்எனசபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

## தெற்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்கள் சந்திப்பில் இந்த முன்னணி உதயமானதாக உத்தியோகபூர்வமாகஅறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், அரகலய செயற்பாட்டாளர் லகிரு வீரசேகர, அனைத்துபல்கலைகழகமாணவர் ஒன்றியங்களிற்கு இடையிலான முன்னாள் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே, முன்னணி சோசலிச கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் சட்டத்தரணி நுவான்போபகே, ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதர மற்றும் இடதுசாரி கட்சிகளின் பிரதிநிதிகள் இந்த புதிய அரசியல் இயக்கத்தில் அங்கம் வகிக்கின்றனர்.

புதிய அரசியல் இயக்கத்தினை ஆரம்பிப்பது குறித்த செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த வசந்த முதலிகே, அரகலய போராட்டம் கடந்த காலத்தில் அமைப்புமுறை மாற்றத்தைக் கோரியே முன்னெடுக்கப்பட்டது என தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் எதிர்பார்த்த மாற்றங்கள் ஏற்படவில்லை என தெரிவித்த அவர் தற்போதைய ஜனாதிபதி, தற்போதைய முறைமையை மேலும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளார்எனகுறிப்பிட்டுள்ளார்.

நிலைத்தன்மை இன்னமும் ஏற்படுத்தப்படவில்லை எனக் குறிப்பிட்டுள்ள வசந்த முதலிகே நாளாந்த வாழ்க்கையில் மக்கள் கடும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின்எதிர்காலத்திற்கு புதிய அரசமைப்பினை அறிமுகப்படுத்தும் நோக்குடன் புதிய அரசியல் இயக்கத்தினை உருவாக்கியுள்ளதாக வசந்த முதலிகே தெரிவித்துள்ளார்.

# தேர்தலை ஒற்றுமையாகப் பகிஸ்கரிப்பதற்கு வட கிழக்கு முஸ்லீம்களும் முன்வரவேண்டும்

## கஜேந்திரன் எம்.பி. கோரிக்கை

தமிழ் மக்கள் மாத்திரமல்ல வடக்கு கிழக்கில் உள்ள முஸ்லீம் மக்களும் எதிர்கால தேர்தலை ஒற்றுமையாக பகிஸ்கரிக்க வேண்டும் என்பதே எமது கருத்தாகும் என தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் நாடாளுமன்ற உறுப்பினரான செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பகுதியில் இடம்பெற்ற விசேடசெய்தியாளர்சந்திப்பில்கலந்துகொண்டுமேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் குறிப்பிட்டவை வருமாறு -

தமிழ் முஸ்லீம் தலைவர்கள் ஒன்றுபட வேண்டும் என்பது ஆரோக்கியமான விடயமாகும். கடந்த மூன்று ஆண்டுகாலமாக நாடாளுமன்றத்தில் எமது கட்சி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் இந்த விடயத்தை வலியுறுத்தி வருவதுடன் வெளியிடங்களிலும் கூறி வருகின்றார். இந்த ஒன்றுபடுதல் என்பது நிரந்திரமாக தமிழ் பேசும் மக்களின் நலன்கள் உள்ளிட்ட நோக்கத்திற்காக மேற்கொள்ளப்பட வேண்டும்.

கடந்த காலங்களில் தமிழ் பேசும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை இந்நாட்டில் எதிர்கொண்டிருக்கின்றார்கள். இதற்கு காரணம் ஒற்றையாட்சி அரசாங்கம் தான். பெரும்பான்மையாக அதிகாரம் ஒரு சாரார் வசம் இருக்கின்ற போது தமிழ் பேசும் மக்கள் அழிக்கப்பட்டிருக்கின்றார்கள். தமிழ் முஸ்லீம் மக்களிடையே பிளவுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவ்வாறான பிளவுகள் எதிர்காலங்களில் ஏற்படக்கூடாது எனின் ஒற்றையாட்சி ஒழிப்பினை மேற்கொள்ள ஹக்கீம் எம்.பி. நடவடிக்கை எடுக்க வேண்டும். சமஸ்டி அரசமைப்பை இந்நாட்டில் கொண்டு வர அவர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறான நிலைப்பாட்டை எடுத்து அதன் பின்னால் தமிழ் முஸ்லீம் மக்களின் ஒன்றிணைவை மேற்கொண்டால் தான் அர்த்தமுள்ளதாக இருக்கும். மாறாக ஒற்றுமை என்ற வார்த்தை பிரயோகம் சம்பந்தன் எம்.பியிடம் கேட்டு எமக்கு புளித்து விட்டது.

இந்த தமிழ் மக்களை ஏமாற்றி வல்லாதிக்க சக்திகளுக்குத் தேவையான ஜனாதிபதி வேட்பாளர் ஒருவருக்கு வாக்குகளை பெற்றுக்கொடுப்பதற்கு கடந்த 18 வருடங்களாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டு வந்திருக்கின்றது. இவ்வாறு தான் முஸ்லீம் தலைவர்களும் செயற்பட்டு வந்திருக்கின்றார்கள்.

எனவே எதிர்காலத்திலாவது இவ்வாறான அணுகுமுறைகளைக் கைவிட்டு தமிழ் முஸ்லீம் மக்களிற்கான நிரந்திர தீர்வு ஒன்றை முன்வைத்து ஒற்றையாட்சியை ஒழித்து சமஸ்டி ஆட்சியை கொண்டு வருவதற்காக ஒன்றுபட்ட நிலைப்பாட்டை எடுக்க முயற்சிப்பாராயின் அது தொடர்பில் எமது தலைமையும் பரிசீலிக்க தயாராக இருக்கும். இவ்வாறான நிலைப்பாடுகளை எடுக்காமல் வெறுமனே இந்த தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற ஏமாற்று நாடகங்களுக்கு நாங்கள் ஒரு போதும் துணை போவதில்லை. தமிழ் மக்கள் மாத்திரமல்ல வடக்கு கிழக்கில் உள்ள முஸ்லீம் மக்களும் இந்த தேர்தலை ஒற்றுமையாக பகிஸ்கரிக்க வேண்டும் என்பதே எமது கருத்தாகும். - என்றார்.(05)

# கிளிநொச்சி மாவட்டத்திற்கான வெல்வோம் ஶ்ரீலங்கா முன்னாயத்தக் கூட்டம் நேற்று செயலகத்தில் நடந்தது

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு நாடுபூராகவும் முன்னெடுத்துள்ள கிளிநொச்சி மாவட்டத்திற்கான வெல்வோம் ஶ்ரீலங்கா மக்கள் நடமாடும் சேவை தொடர்பான முன்னாயுத்த கூட்டம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் காணி நளாயினி இன்பராஜ் தலைமையில் நடைபெற்ற குறித்த கலந்துரையாடலில் அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.எம் பியதிஸ்ஸ ,உதவி மாவட்ட செயலாளர் ,பொலிஸ் அதிகாரி ,திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்திற்கான வெல்வோம் சிறீலங்கா நடமாடும் சேவை எதிர்வரும் ஜூலை மாதம் 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் கிளிநொச்சியில் முன்னெடுக்கப்படவுள்ளது.

(05 - 113)

# பொத்துவில் முகுதுமகா விகாரை பிரச்சினைக்குத் நிரந்தரத் தீர்வு

(கே எ ஹமீட்)

75 வருடகால பிரச்சினையை முடிவுக்குக்கொண்டுவந்த முகுதுமகா விகாரை மற்றும் மண்மலை தொடர்பான வர்த்தமானிக்குப் பணிந்து அங்கு தொடர வேண்டிய பணிகள் குறித்த கூட்டம் செவ்வாய்க்கிழமை நகர அபிவிருத்தி அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் செயலாளர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், பௌதீக திட்டமிடல் திணைக்கள அதிகாரிகள், கடற்படையின் கட்டளை தளபதிகள், அம்பாறை மாவட்ட தொல்பொருள் உத்தியோகத்தர்கள், பொத்துவில் பிரதேச செயலாளர், புத்த சாசன அமைச்சின் அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.

வர்த்தமானி அறிவித்தலை அமுல்படுத்தும் பணியின் தொடர்ச்சியாக மக்கள் குடியிருப்பு நிலங்களில் உள்ள எல்லைகற்களை அகற்றுதல், குறித்த வர்த்தமானியிலிருந்து மையவாடியை விடுவித்தல், எதிர்காலத்தில் வீதியில் சேரும் மண்ணை இடையூறின்றி அகற்றுவற்கான அனுமதியை சிசிடிக்கு வழங்குதல், கடற்படை உத்தியோகத்தர்கள் இங்குள்ள பிக்குகளின் அழுத்தமின்றி சுதந்திரமாக பணிபுரிதல் என்பன குறித்து கூட்டத்தில் திட்டமிடப்பட்டன.

இவ்வர்த்தமானி குறித்து ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டிருந்த பல வழக்குகள் முஷாரப் எம்.பியின் முயற்சியால் வாபஸ் பெறப்பட்டிருக்கின்ற அதேவேளை, அங்குள்ள சிறிய பிக்குவால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வர்த்தமானிக்குப் புறம்பாக பிழையான தகவல்கள் அடங்கிய வழக்கு தொடர்பான பணிகளை விரைவாக முடிவுறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் திட்டமிடப்பட்டுள்ளது. (05)

# சிறுவர் பாதுகாப்பு சேவை வழங்கல் ஆய்வு முடிவு வெளியிடும் நிகழ்வு

(ஹஸ்பர் ஏ.எச்)

சிறுவர்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான இளைஞர்கள் முன்னணியால் ‘வினைத்திறனான சிறுவர் பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்காக ’அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்: என்ற தொனிப்பொருளில் நிகழ்வு ஒன்று நேற்று(புதன்கிழமை) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வினை, சிறுவர் நிதியம், சிறுவர் அபிவிருத்தி நிதியம், அக்சன் யுனிட் லங்கா ஆகியன இணைந்து ஒழுங்குபடுத்தியிருந்து.

கிழக்கு மாகாணத்தில், சிறுவர் பாதுகாப்பு சேவைகளை வழங்கும் அதிகாரிகளிடம் மேற்கொண்ட பண்புசார் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் ஆய்வின் விளைவுகளை திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட மட்டத்தில் சிறுவர் பாதுகாப்பு சேவை வழங்குவதில் தற்போது உள்ள முக்கியமான இடைவெளிகளை கண்டறிவதற்காக முறையான தரவுகளை சேகரித்து பகுப்பாய்வு செய்தலும் பரிந்துரைகளை ஆராய்ந்து நடைமுறைப்படுத்தலும், சிறுவர் பாதுகாப்புசார் சேவைகளை வழங்கும் அதிகாரிகளுக்கு சிறுவர்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான இளைஞர்கள் முன்னணியால் தெளிவுபடுத்தும் நிகழ்வாக இந்நிகழ்வு திருகோணமலை ஜேகப் பீச் ஹோட்டலில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறுவர்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான இளைஞர்களால் ‘இலங்கையில் சிறுவர்கள் அதிகம் வன்முறையால் பாதிக்கப்படுகின்றனர், அவர்களுக்காக பணிபுரியும் அதிகாரிகள் வன்முறைகளை குறைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டாலும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு பல தடைகள் உள்ளன, குறிப்பாக பயிற்சி, நிதி தொடர்பான தடைகள் அதிகம் உள்ளதுடன் சமூக மட்டத்தில் சிறுவர்களுக்காக பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் அவர்களின் கடமைகள் பொறுப்புகள் தொடர்பாக தெளிவுபடுத்தல் போதியளவு இன்மை’ தொடர்பாக தமது ஆய்வின் அடிப்படையில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி, சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் உட்பட கிழக்கு மாகாணத்தை சேர்ந்த சிறுவர் சேவை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ,சிறுவர் அபிவிருத்தி நிதிய உத்தியோகத்தர்கள், அக்சன் யுனிட் லங்கா உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

(05)

# கதிர்காமம் காட்டுப் பாதை திறப்பு ஜூன் 30 நிச்சயம்

## அம்பாறை மாவட்ட மேலதிக செயலர் தெரிவிப்பு.

(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஆணைப்படி கதிர்காமத்திற்கான காட்டுப் பாதை எதிர்வரும் 30 ஆம் திகதி திறக்கப்படுமென்று அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ.ஜெகராஜன் தெரிவித்தார்.

இந்த அறிவித்தலையடுத்து நேற்று (வியாழக்கிழமை) லாகுகல பிரதேச செயலகத்தில் நடைபெறவிருந்த பாதயாத்திரை தொடர்பான கூட்டம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஆளுநர் அலுவலகத்தில் இருந்து செவ்வாய்க்கிழமை எமக்கு உத்தியோகபூர்வ கடிதம் கிடைக்கப்பெற்றது.

ஆளுநரின் செயலாளர் மதநாயக்க அனுப்பி வைத்த அக் கடிதத்தின் பிரகாரம் காட்டுப் பாதை 30 ஆம் திகதி திறக்கப்படும். அதில் கௌரவ ஆளுநர் கலந்து கொள்ளவிருக்கிறார். அதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு கூறப்பட்டுள்ளது.

காட்டுப்பாதை திறப்பதில் முன்னொரு போதுமில்லாத வகையில் சர்ச்சை நிலவியது. இருந்தபோதிலும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அந்த சர்ச்சையை நீக்கி உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். எனவே, அடியார்கள் அந்த திகதியை மையமாக வைத்து செயற்படுமாறு வேண்டுகிறேன். - என்றார்.

உகந்த மலை முருகன் ஆலயத்தில் அண்மையில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு 30 ஆம் திகதி ஆகும்.

அதே தீர்மானம் ஆளுநரால் மீண்டும் உறுதிப்படுத்தபட்டுள்ளது.(05)

# நீதி அமைச்சின் இணைப்பாளர்கள் கஜேந்திரன் எம்.பியுடன் சந்திப்பு




தமிழ்த் தேசிய மக்கள் முன்ணணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனுடன், நீதி அமைச்சின் இணைப்பாளர்களான வணக்கத்துக்குரிய கலஹம தர்மரன்சி தேரர், சிவஸ்ரீ டாக்டர் ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா சந்தித்து மேலும் வட பகுதியில் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளுக்கு தொடர்பான கலந்துரையாடல்களை மேற்கொண்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வேண்டாத செயல்

பாலினசமத்துவசட்டமூலம்குறித்தஉயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை சாடும் விதத்தில் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் வெளியிட்ட கருத்துக்கள் இலங்கையையே ஒரு உலுப்பு உலுப்பியுள்ளன. நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அது தொடர்பில் கடுமையான எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டுவருகின்றன. அரசுத்தலைவரின் செயல் நீதித்துறையின் சுயாதீனத்தைக் கட்டுப்படுத்துவதாகவும் அதில் நிறைவேற்றுத்துறையின் தலையீடாகவும் பார்க்கப்படுகின்றது.

அரசுத் தலைவரின் கருத்து உயர் நீதிமன்றத்திற்கும் நாட்டின் நீதி அமைப்பிற்கும் அச்சுறுத்தலானது என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது. அரசுத் தலைவரின் கருத்துத் தொடர்பாக அச்சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் அது தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

”அரசுத் தலைவரின் கருத்து அரசமைப்பு வழங்கிய அதிகாரத்தின்படி நீதித்துறையின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் உயர்நீதிமன்றத்திற்கும் முழு நீதித்துறை அமைப்பிற்கும் அச்சுறுத்தலான ஒன்றாகும்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை ஆராய்வதற்காக நாடாளுமன்ற தெரிவுக்குழுவை ஏற்படுத்துவது ஆபத்தான முன்னுதாரணம். ஜனாதிபதியின் கருத்தும் நடவடிக்கைகளும் நீதித்துறையின் சுதந்திரத்தினை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் நோக்கத்திலானது. உயர் நீதிமன்றம் அரசமைப்பிற்கு முரணானது என அறிவித்துள்ள சட்டமூலத்தை பலவந்தமாக நிறைவேற்ற முயற்சிகள் இடம்பெறுகின்றன.

நீதித்துறை சுதந்திரமாக செயற்படுவதற்கும் வெளி அழுத்தங்கள் இல்லாமலும் செயற்படுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட சட்டமூலம் நாட்டின் அதி உச்சசட்டத்துடன் ஒத்துப்போகின்றதா என்பதை மதிப்பிடுவதன் மூலம் உயர்நீதிமன்றம் தனது கடமையை நிறைவேற்றியுள்ளது. தனிநபர்களிற்கு அதனை ஏற்பதற்கும் நிராகரிப்பதற்கும் உரிமையுள்ளது. ஆனால் நாடாளுமன்றமோ நிறைவேற்றதிகாரமோ மக்களுக்கான கடமையை நிறைவேற்றுவதற்காக நீதித்துறையை விமர்சிக்ககூடாது.

நீதிதுறையின் செயற்பாடுகளிற்கு மதிப்பது நாடாளுமன்றம் மற்றும் நீதித்துறையின் கடமையாகும். எந்தவொரு தலையீடும் மோசமான விளைவுகளுக்கு வழிவகுக்கும் நாட்டில் சட்டத்தின் ஆட்சிக்கு மோசமான விளைவுகளைஏற்படுத்தும்” என்றுதனது அறிக்கையில் கூறியதன் மூலம் அரசுத் தலைவருக்கு ஒரு பலமான குட்டு வைத்துள்ளது சட்டத்தரணிகள் சங்கம்.

இதற்குமேல், அரசுத் தலைவர் தனது பதவிக் காலத்தை மேலும் ஒரு வருடம் நீடிப்பதற்கான சட்டத் திருத்தத்தைக் கொண்டுவரும்போதும், நீதிமன்றம் அதற்கெதிராக இத்தகைய தீர்ப்பை வழங்கினால் அதனை உதாசீனம் செய்து தனக்கு வேண்டியபடி சட்டத் திருத்தங்களை நிறைவேற்ற அரசுத் தலைவர் மேற்கொள்ளும் நடவடிக்கைதான் இது என்கிற கண்டனங்களும் எழுந்துள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் நேற்று நாடாளுமன்றத்தில் இந்தக் கருத்தை பகிரங்கமாகவே தெரிவித்தார். அது நியாயமான சந்தேகமும்கூட.

நீதித்துறையின் சுயாதீனத்தைப் பாதுகாக்க ஒரு காலத்தில்முற்பட்டவரானரணில்விக்கிரமசிங்கஇப்போது தனது சுயநலத்திற்காக நீதித்துறையை மலினப்படுத்த –முயற்சிப்பது ஏற்றுக்கொள்ளப்படமுடியாதது. கண்டிக்கப்படவேண்டியது. தனது கருத்துக்களை அரசுத் தலைவர் மீளப்பெறுவதுடன், நீதித்துறையின் சுயாதீனத்தை உறுதிப்படுத்தவும் முன்வரவேண்டும்.

# வாழ்நாளை வளர்க்கும் வாசிப்புப் பழக்கம்



கிருங்கை சேதுபதி

கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் தொடங்கிவிட்டன. பாடம், படிப்பு, தேர்வு என்கிற வட்டத்திற்குள் வந்துவிட்டனர் குழந்தைகள். விடுமுறைக்காலத்தில்எடுத்தசிறப்புப்பயிற்சிகளான நீச்சல், பாட்டு, இசைக் கருவிகளை இசைத்தல் உள்ளிட்ட எவையும் இனி தொடருமா, வளருமா? தெரியாது. போட்டித்தேர்வுகள்பிரதானமாகிவிட்டன.

‘எக்ஸ்ட்ரா கரிக்குலர் ஆக்டிவிடிஸ் போய் எல்லாமும் எக்ஸாம் கரிக்குலர் ஆக்டிவிடிஸ் ஆக மாறிவிட்டது என்று எதுகை மோனையுடன் ஆங்கிலத் தமிழில் புலம்பினார் நண்பர் ஒருவர்.

கலை இலக்கிய வாழ்வியல் செயற்பாடுகள் குறைந்துபோய்த் தேர்வுகள் குறித்த திசை நோக்கிய பயணமாகவே கல்வி ஆகி வருகிறது என்பது அவர்தம் கவலை. என்ன செய்வது?

வருங்கால வாழ்வைத் திட்டமிடுகிறபோது தவிர்க்கமுடியாதவைஇவை. ஆனாலும்கல்வியின் அடிப்படைப் பயிற்சி முறைகளான எழுத்தும் வாசிப்பும் இன்னும் வளப்படுத்த வேண்டிய நிலையிலேயே இருக்கின்றன.

அழகாகஆங்கிலத்திலும்தமிழிலும்பேசத்தெரிந்த பிள்ளைகளுக்கு அவர்கள் பயிலும் வகுப்பின்கீழ் இருக்கிற பாட நூல்களைக் கொடுத்து வாசிக்கச் சொன்னால் திணறுகிறார்கள். சில சொற்களைச் சொல்லி எழுதச் சொன்னால், எழுத்துகள் அவர்களுக்குப்பரிச்சயமில்லைஎன்பதுபளிச்செனத் தெரிகிறது. ஒற்றை இலக்கண எண்களைக் கூட, கூட்டவோ, பெருக்கவோ, வகுக்கவோ கைப்பேசிக் கணக்கானை இயக்கத் தொடங்கிவிடுகிறார்கள். வாய்பாடும் மனப்பாடமும் போயே போச்சு.

என்றோ கேட்ட வானொலிப் பேட்டி ஒன்றில் வ.சுப.மாணிக்கனார் சொன்னது நினைவுக்கு வருகிறது. ‘எனக்குத் தொல்காப்பியம் முழுவதும் மனப்பாடம். திருக்கு முழுவதும் பாடம். திருவாசகம் தினமும் ஓதுவதுண்டு...’

இன்னும் அவர் சொன்னதைக் கேட்டதுகூட மறந்துவிட்ட எனக்கு, இப்படிச் சொல்லும்படி என்ன தெரியும் என்று கேட்டுக்கொண்டே படிக்கப் பழகுகிறேன்.

எதையும்காட்சிஊடகவாயில்களின்மூலமாகவே கற்றுத்தேறுகிறதலைமுறையினராக இருக்கிறோம். இவற்றையெல்லாம்படித்து என்னவாகப்போகிறது? தேவையென்றால் கூகுள் பகுதியை வருடினால் போதும், எல்லாம் வந்து கொட்டும் என்கிற பதில் படக்கென்று வந்துவிடுகிறது.

பழமோ, உணவோ, பார்த்துப்பசியாற முடியாது. புசித்தால் தான் உயிர் வாழ முடியும். அதுவும் செரித்தால்தான் உண்டு. வாசிப்பும் அப்படித்தான். ரசித்து, ருசித்துப் படித்து உள்வாங்கி உணர்வில் கலந்துவிட்டால் அதன் நினைவுச் சுகமும் சிந்தனை வலிமையும்ஈடுஇணையற்றவை. காலிவயிற்றைக் காற்று நிரப்பி நோய் செய்வதுபோல, வாசிப்பற்ற மனத்தை, வறட்சி மிகுந்த யோசனைகள் நிரப்பிச் செயலாற்றலைச் சிதைத்துவிடுகின்றன.

வாசிக்க முடியாவிட்டாலும் யோசிப்பதற்கு உரிய கருத்தாடல்களைச் செவிமடுக்கவாவது செய்யலாம். இன்றைக்கு நமது,பேச்சு முறையும் திரைசார் உரையாடல் மொழியாகவே இருக்கிறது. கைப்பேசிகளில்உலாவரும்சிறு, குறுங்காட்சிகளின் செயற்கையான பேச்சுமுறையே வளரிளம் குழந்தைகளின் புழங்குமொழி ஆகி வருகிறது. வீடுகளுக்கே உரிய தனிச் சொற்களும் உரையாடல்களும்வட்டாரம்சார்ந்தபழமொழிகளும் சொலவடைகளும் முற்றாக ஒழிந்துவிட்டன போலும். முதியவர்களின் உரையாடல்கள் கூட, தற்காலக் காட்சி ஊடக மொழிவயப்பட்டுவிட்டன.

மரபுத் தொடர்களையோ, பழமொழிகளையோ பேசவும் கேட்கவும் கூடிய வாய்ப்புகள் அருகிவிட்டமையால், அவற்றை வாக்கியத்தில் அமைத்து எழுதுகிற பயிற்சி இந்தத் தலைமுறையினருக்குச் சிரமமாய் இருக்கிறது. வாய்விட்டுப் படிக்கவும் மனம்கொள்ளுமாறு கேட்பதும் நடைமுறையில் குறைந்திருக்கிறது. அவசர யுகம்தான். ஆனாலும், அடிப்படையான சொற்களைக் கூட எழுதவும் பேசவும் முடியாமல் போனால், சிந்தனை என்னாகும்? உடம்புக்குத் தேவையான வசதிகளை வளப்படுத்திக் கொள்வதுபோல், உள்ளத்திற்குத் தேவையானவற்றையும் வைத்துக் கொள்ள வேண்டும் அல்லவா?

உரிய காலங்களில் பயன்படுத்தாமல் போகிற சொற்கள் காலாவதியாகிவிடுகின்றன. அன்றாட வாழ்வில் புழக்கத்தில் இருந்த சொற்கள் பல அகராதிகளில் தஞ்சமடைந்திருக்கின்றன. சொந்த வீட்டில் சுகமாக வாழ்கிற மக்களை அகதிகள் முகாமிற்கு அனுப்பிவிட்டதுபோல் வேதனையாக இருக்கிறது. அதனால், மொழிக்கு இழப்பு இருக்கிறதோ, இல்லையோ நம் சிந்தனைக்கு வறட்சி வந்துவிடும்.

தாய்மொழிப் பயிற்சியும் பயன்பாடும் குறைந்து வருகிறபோது, மண் சார்ந்த மரபுகள் அருகிவிடுகிற போது, நம்பிக்கையும் மனிதாபிமானமும் குறைந்துவிடுவது உறுதி. விபரீத எண்ணங்களும் செயல்களும் மிகுந்து சமூகக் குற்றங்கள் பெருகிவிடும். செயற்கைத் தொழில்நுட்ப வளர்ச்சிக்குத் தேவைதான். ஆனாலும், மனிதன் இன்னமும் இயற்கை உயிரிதான் என்பதை மறந்துவிடக்கூடாது.

உயிருடன் இருக்க, இயங்க ஓய்வில்லாது சுவாசித்தல் நடக்க வேண்டும். அதுபோல், உயிர்ப்புடன் இருக்க, இயங்கத் தொடர் சிந்தனை தேவை. தினமும் காலைக்கடன்களை முடித்துவிட்டுக் குளித்த பிறகு, பூசை அறையில் நின்றுசிலபாசுரங்களையோ, திருமுறைகளையோ, மந்திரங்களையோ சொல்லுவதால் பக்தி மட்டும் வெளிப்படுவதில்லை, நினைவாற்றலும் நிலைப்படுகிறது. வாய்விட்டு ஓதுகிறபோது எழும் அதிர்வலைகள் மனத்தில் புத்துணர்வும் உடலில் மெல்லிய நுண் இயக்கங்களும் உருவாகின்றன.

என் தந்தையார் தினமும் படிக்கிற நூல்களில் இருந்து எழுதிய பக்கங்கள் பல ஏடுகளாக இருக்கின்றன. அவை யாவும் மூளைக்குள் முளைவிடுவதற்காக இடுகிற வீரிய சிந்தனை விதைகள் என்பது இப்போது புரிகிறது. பள்ளிக்குப் போகுமுன் வாசிக்கச் சொல்லிப் பழக்கிய அவர், வருவித்து வைத்திருக்கும் இதழ்களை உரத்து வாசிக்கச் சொல்லிக் கேட்பார். பயன் இருவருக்கும்.

# வாழ்நாளை வளர்க்கும் வாசிப்புப் பழக்கம்

4ம் பக்க தொடர்ச்சி..........

புரியாத தொடர்களை, செய்திகளை, கதைகளை இடையிடையே அவர் விளக்கவும் செய்வார். பின்னால், அவை எந்தெந்தப் புத்தகங்களில் இருக்கின்றன என்பதைக் கண்டறிந்தபோது வியப்பாக இருந்தது. இளமையில் எழுதப் படிக்கக் கற்கிற சுகமும் வேகமும் முதுமையை இளமையாக்கும் உற்சாகப் பயிற்சிகள்.

இன்றைக்கு வயது வேறுபாடில்லாமல் எல்லாரும் நடைப்பயிற்சி மேற்கொள்கிறார்கள். முடிந்த வரையில் உடற்பயிற்சி செய்கிறார்கள். யோகா வகுப்புகளும் நிரம்பிவழிகின்றன. இதுபோல், அகப்பயிற்சியாக, வாசிப்புப் பயிற்சி இருக்கிறது என்பதை வசதியாக மறந்துவிடுகிறார்கள்.

மலையாளத்தில் மறுபதிப்பு வருகிற நூல்களின் எண்ணிக்கை பல ஆயிரங்களைத் தொடுகிறபோது, இன்று தமிழில் நூறுகளைக் கடப்பதற்கேஅரும்பாடுபடவேண்டியதாயிருக்கிறது என்பதும் வருத்தத்திற்குரிய செய்திதான். படித்தவர்களின் எண்ணிக்கை கூடிய அளவிற்கு வாசிப்பவர்களின்எண்ணிக்கைகுறைந்துவருவது ஒருவித வீழ்ச்சியே. சிந்தனைத் தேய்மானம் பெருகிவருகிற இந்தக் காலகட்டத்தில் செயற்கை நுண்ணறிவுச் செயல்பாடுகள் மிகுந்து வருவது மனிதகுலத்திற்கான சவாலை அதிகரிக்கச் செய்கிறது.

காலத் தேவைக்கேற்பச் செறிவூட்டப்பட வேண்டிய சிந்தனைத் திறன் பயனற்ற பொழுதுபோக்குக்கருவிகளால்மழுங்கடிக்கப்பட்டு வருவது ஆபத்தானது. அடிக்கடி படிப்பதற்கான புத்தகங்களைப் பரிமாறிக் கொள்கிற நண்பர் ஒருவரை இரண்டாண்டுகளாகக் காணோம். எதிர்பாராத விதமாக எதிர்ப்படுகிறபோது வருத்தப்பட்டுச் சொன்னார். 'புதுசா ஒரு கைப்பேசியை என் மகன் வாங்கிக் குடுத்திட்டான். காணொலிகளிலேயே என் பொழுது கழிஞ்சு போயிச்சு. அதிலிருந்து மீண்டுவரப் பழகி வர்றேன்!' என்றார்.'

முதியவர்களுக்கே இந்த நிலை என்றால், வளரிளங்குழந்தைகளின் நிலை என்னவாகும் என்று கவலைப்படாமல் இருக்க முடியவில்லை. முகத்துக்கு நேரே கைப்பேசியை வைத்துப் பார்க்கப் பழகிவிட்டபிறகு, நடைபாதையில் காலுக்குக் கீழே என்ன இருக்கிறது என்பதைக் கவனிக்கக் கூடத் தெரியாமல் போய்விடுகிறது. தொலைநோக்குப் பார்வை குறைந்தேவிட்டது என்பதைத் திரும்பத் திரும்ப நினைவுபடுத்திக் கொள்ள வேண்டி இருக்கிறது. இ-புக், ஃபேஸ்புக் எல்லாம் இருக்கட்டும். எடுத்து விரித்து வாய்விட்டுப் படிக்கிற புத்தகங்கள் நம் கைகளில் இருக்கட்டும். வாசிப்புப் பழக்கம் அன்றாடம் நடக்கட்டும்.

நம் இல்லத்துப் பிள்ளைகளை மையமாக வைத்தே நம் இயக்கங்கள் அனைத்தும் இருக்கின்றன. அவர்களின் கல்வி முதலான அடிப்படை வசதிகளைக் கொண்டே நாம் கஷ்டங்களைச் சகித்து வருகிறோம். அவர்களை வளர்க்கிறோம். அவர்களுடன் சேர்ந்து நாமும் வளர்கிறோம். அவர்களோடு கூடி இருந்து உண்ணுவதுபோல, தினமுமோ, வாரத்தின் ஓரிரு நாள்களிலோ கூடி, வாசிக்கிற பழக்கத்தைக் கொள்ளலாமா?

தொலைக்காட்சிப் பெட்டியுடன் கூடிய வரவேற்பு அறைகளில், பத்திரிகைகளோடு படிப்பதற்கு ஏதுவான புத்தகங்களும் வைத்துப் பழக்கப்படுத்திக் கொள்வதும் முறை வைத்து வாசிப்பதும் வாசித்தவை குறித்து விவாதிப்பதும் உற்சாகமான உரையாடலுக்கும் சிந்தனைக்கும் வழிவகுக்கும்.

உறவுகளுக்குள் நடந்த வேண்டாத வம்புகளைப் பேசி மனவருத்தங்களைப் பெருக்கிக் கொள்வதைவிட, வேண்டியவற்றைத் தெரிவு செய்து வாசிப்பதும் விவாதிப்பதும் மன அழுத்தங்களைக் குறைக்கும். மனித மாண்பை வளர்க்கும் அல்லவா? வாழ்நாள்களை வளர்விக்கும் வாசிப்புப் பழக்கத்தை நாள்தோறும் கடைப்பிடித்தால் நல்லது.

'நல்ல நாள் என்று?' எனத் தேடாமல், தள்ளிப் போடாமல், இன்றே, இப்போதே, உடனே வாசிப்பைத் தொடங்குங்கள். தொடருங்கள்!

# சிவாச்சாரிய அபிஷேக குரு பட்டாபிஷேகம்



(வி.ரி. சகாதேவராஜா)



வரலாற்று பிரசித்தி பெற்ற உகந்தை மலை முருகன் ஆலயத்தில் வரலாற்றில் முதல்முறையாக சிவாச்சார்ய அபிஷேக குரு பட்டாபிஷேகம் திங்கட்கிழமை நடைபெற்றது .

முதல்குருபட்டாபிஷேகம்ஆலயத்தின் உதவிக்குருகு.சீ.கோவர்த்தனசர்மாவிற்கு நடைபெற்றது.

முத்து ஆலயத்தின் உதவிக்குரு கோபி நாத சர்மா ஐயாவிற்கு குரு பட்டாபிஷேகம் நடைபெற்றது.

உகந்தமலை முருகன் ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ க. கு .சீதாராம் குருக்கள் பட்டாபிஷேத்தை நடத்தி வைத்தார்.

இதுவரை இவர்கள் இருவருக்கும் வழங்கப்பட்டு வந்த சர்மா என்ற நாமம் இனி குருக்கள் என அழைக்கப்படும்.

உகந்தை முருகனின் அருளும், ஆசீர்வாதமும்கிடைக்கசூழஇருந்தவர்கள் வாழ்த்தினார்கள்.

(05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்

தொடர்புகளுக்கு: 0777 43 5557
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# வடமத்திய மாகாண சுகாதாரக் குழு அக்கரைப்பற்றுக்கு களப் பயணம்

(றிஸ்வான் சாலிஹ், சியாத்.எம்.இஸ்மாயில்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு வடமத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் உள்ளிட்ட ஊழியர்கள் குழுவினர் சனிக்கிழமை கள விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இன் நிகழ்வில் வடமத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் டப்ளியூ. எம். பாலித பண்டார தலைமையிலான ஊழியர்கள் குழாமினர், வைத்தியசாலையின் கழிவு முகாமைத்துவம் உள்ளிட்ட ஏனைய பிரிவுகளையும் தற்போது இவ்வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற வைத்திய சேவைகள் மற்றும் சாதனைகளையும்பார்வையிட்டனர்.

இவ்வைத்தியசாலைக்கு புதிய வைத்திய அத்தியட்சகராக நியமிக்கப்பட்ட டாக்டர் ஐ.எம்.ஜவாஹிரையும் பாராட்டி கௌரவித்ததோடு, கள விஜயத்தின் ஞாபகார்த்தமாக வடமத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரால் வைத்திய அத்தியட்சகருக்கு நினைவுச்சின்னம் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# மதத் தலைவர்களைப் பாராட்டிய முன்னாள் ஜனாதிபதி மஹிந்த

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அண்மையில் நீதி அமைச்சின் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஒருங்கிணைப்பாளர்களாக நியமிக்கப்பட்ட சர்வமத தலைவர்களான வண. கலாநிதி சாஸ்த்ரபதி கலகம தம்மரன்சி நாயக தேரர், சிவஸ்ரீ கலாநிதி ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா, அல்-ஹாஜ் அஷ்-ஸெய்யித் அல்-ஹாபிழ் கலாநிதி ஹஸன் மௌலானா அல்-காதிரி, அருட்தந்தை கலாநிதி நிஷான் குரே பாதர் ஆகியோர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் சந்தித்தனர்.

இந்த சந்திப்பின்போது இனங்களுக்கிடையில் சகவாழ்வு இன, மத நல்லிணக்கத்தை மேற்கொள்ளவதில் 20 வருடங்களுக்கும் மேலாக அக்கறையுடனும், முன்மாதிரியுடனும் செயலாற்றிவரும் சர்வமத தலைவர்களுக்கு இதன்போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

அத்துடன் சர்வமத தலைவர்களுக்குப் புதிதாகக் கிடைத்த இப்பதவியினூடாக இலங்கையில் வாழக்கூடிய மூவின சமூக மக்களுக்கிடையில் இன,மத நல்லிணகம் சகவாழ்வை பலப்படுத்த இப்பதவி நல்லதோர் சந்தர்ப்பமாக உள்ளதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இன,மத நல்லிணக்கத்திற்கான எதிர்கால வேலைத் திட்டங்களை சிறப்புடன் முன்னெடுத்துச்செல்ல சர்வமத தலைவர்களுக்கு முன்னாள் ஜனாதிபதி மனமகிழ்வுடன் தனது வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் மேலும் தெரிவித்துக்கொண்டார்.(05)

# மருதமுனை 'குக் வித் நாணல்' சமையல் போட்டி நிகழ்வுகள்





(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை நாணல் கலை இலக்கிய வட்டம் ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்த 'குக் வித் நாணல்' எனும் சமையல் போட்டி நிகழ்வு நாணல் கலை இலக்கிய வட்டத்தின் தலைவி ஏ.ஆர்.பாத்திமா சூபா தலைமையில் புலவர்மணி ஷரிபுத்தீன் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதில் சிரேஷ்ட கவிஞரும் நாணல் கலை இலக்கிய வட்டத்தின் ஆலோசகருமான எம்.எம்.நௌபல் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், கௌரவ அதிதிகளாக அதிபர் ஏ.முஹம்மட்.அன்சார், அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் ஐ.எல்.எம்.இர்பான், கலாநிதி. தல்ஹா சீனி முஹம்மட் ஆகியோர் கலந்து கொண்டதுடன், விஷேட அதிதிகளாக சென்.ஜூடி பரா மெடிகல் கொலேஜ் பணிப்பாளர் சப்ராஸ் மன்சூர், கரையோர பராமரிப்பு திட்டமிடல் அதிகாரி



எம்.எஸ்.அஹமட் மகப்றூர், மூன் விலேஜ் ஹோட்டல் உரிமையாளர் எம்.எம்.ஹிஸாம், ஆபிதா ஹேன்ட்லூம் எம்.என்.இசட்..றூமி, சப்னம் ப்றூட் சொப் என்ட் ஐஸ் ஏஜ் பணிப்பாளர் ஏ.டபிள்யூ.எம்.நாபிர், இல்ஹாஸ் பூட் சிற்றி உரிமையாளர் பி.எம்.எம்.இல்ஹாஸ், எம்.ரீ.வாக்கிர் அஜமல், தாஜ் சாப்பாட்டுக் கடை எஸ்.எம்.தாஜுதீன், பிறை எப். எம் பிரதிப் பணிப்பாளர் பஷீர் அப்துல் கையூம், ஓய்வு பெற்ற அதிபர் டேவிட், சிரேஷ்ட அறிவிப்பாளர் ஏ.ஆர்.ஏ.புகாரி, கவிஞர் ஜெமீல், கவிஞர் விஜிலி, கலை இலக்கிய வட்டத்தின் ஊடக ஒருங்கிணைப்பாளரும் படப்பிடிப்பாளருமான சத்தார் எம்.முஜீப், ஆகியோருடன் இலக்கிய ஆளுமைகள், கவிஞர்கள் ,ஆசிரியர்கள் ,நாணல் கலை இலக்கிய வட்டத்தின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்வில் தமிழ் பாடல்களை இசை ஆசிரியர் எம்.ஜெம்சித், எம்.என்.சற்.றூமி, சிங்களப்பாடலை கெப்டன் எம்.ஐ.எம்.சுல்பிகார் ஆசிரியரும் வழங்கினார்கள். நகைச்சுவை நாடகம் ஒன்றை ஊடகவியலாளர் நிஸா இஸ்மாயில், ஏ.அஹ்னா, எம்.ஐ.சம்ஹா ஆகியோர் வழங்கினார்கள். கவிதை வாசிப்புகளை நாணல் கலை இலக்கிய வட்டத்தின் உறுப்பினர்களான மூத்த கவிதாயினி மாஜிதா தௌபீக், சிபானா அஸீம், எஸ்.அக்கீலா பானு, பதுர் நிஸா போன்றோர் வழங்கினார்கள், நாட்டார் பாடலொன்றை கலை இலக்கிய வட்டத்தின் தலைவி கவிதாயினி ஏ.ஆர்.பாத்திமா சூபா வழங்கினார். கேள்வி பதில் நிகழ்ச்சியை ஊடகவியலாளர் றாசிக் நபாயிஸ் நடத்தினார். நிகழ்ச்சிகளை சிரேஷ்ட ஊடகவியலாளர், அறிவிப்பாளர் ஏ.எல்.எம்.ஷினாஸ் தொகுத்து வழங்கினார்.

நாணல் கலை இலக்கிய வட்டத்தால் நடாத்தப்பட்ட சமையல் போட்டியில் கலை இலக்கிய வட்டத்தின் உறுப்பினர்கள் மூவர் கலந்து கொண்டதில் பதுர்நிஸா முதலிடத்தை பெற்றமைக்காக ஓய்வுபெற்ற மனையியல் பாட ஆசிரியர் ஏ.எஸ்.உம்முல் பாரியாவால் கிரீடம் அணிவிக்கப்பட்டு பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டதுடன் இரண்டாம் , மூன்றாம் இடங்களை பெற்றுக் கொண்ட எச்.எம்.நூர்சிபா, எம்.ஐ.ஜீஸான் பேகம் ஆகிய இருவருக்கும் பரிசுகள் வழங்கி வைக்கப்பட்டன.

எல்லா கலைஞர்களையும் ஊக்குவிக்க வேண்டும் எல்லோரும் திறமையாளர்கள். சமையலும் ஒரு கலைதான் அந்த வகையில் அவர்களையும் வெளியே கொண்டு வரவேண்டும் எனும் நோக்கோடு சமையல் கலைஞர்களுக்கும் மேடை ஏற்படுத்தி கொடுத்த கலை இலக்கிய வட்ட தலைவி ஏ.ஆர்.பாத்திமா சூபாவுக்கும் பலரும் தமது பாராட்டுக்களைத் தெரிவித்தனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

## மத்திய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வகையில் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதை சுட்டிக்காட்டினோம்.

நாட்டின் நிதி அதிகாரம் பாராளுமன்றத்துக்கு உண்டு. மத்திய வங்கியின் சம்பள அதிகரிப்பை நாடாளுமன்றமே அனுமதிக்க வேண்டும். மத்திய வங்கியின் முறையற்ற செயற்பாடுகள் வெளிப்பட்டுள்ளது.ஆகவே மத்திய வங்கியின் உயர் அதிகாரிகள் உடன் பதவி விலக வேண்டும்.

இதன்போது எழுந்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, நாட்டின் சேவைத்துறையினரும் சம்பள அதிகரிப்புக்காக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நிலையில் மத்திய வங்கியின் அதிகாரிகளது சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அரசியல் தலையீடுகள் ஏதும் இல்லாமல் மத்திய வங்கி சுயாதீனமாக செயற்பட வேண்டும் என்பதற்காக மத்திய வங்கி சட்டம் இயற்றப்பட்டது.

சுயாதீனத்துக்காக இயற்றப்பட்ட சட்டத்தை பயன்படுத்தி மத்திய வங்கி தனக்கு ஏற்றாற் போல் சம்பளத்தை அதிகரித்துள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறும்போது அரசு ஏன் கைப் பொம்மை போல் இருந்தது என கேள்வியெழுப்பினார்.

ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரசன்ச, மத்திய வங்கியின் சம்பள அதிகரிப்பு குறித்து அரச நிதி தொடர்பான குழுவின் தலைவர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். சட்டவிரோதமான முறையில் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளமை வெளிப்பட்டுள்ளது. இவ்விவகாரத்தில் ஆளும் தரப்புக்கும், நாடாளுமன்றத்துக்கும் பொறுப்புண்டு, நாடாளுமன்றம் தனது பொறுப்பை நிறைவேற்றியுள்ளது.

மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநர் தான் தன்னிச்சையான முறையில் இலங்கை வங்குரோத்து நிலையடைந்து விட்டது என்பதை அறிவித்தார். முறையற்ற வகையில் சம்பளத்தை அதிகரித்துள்ள மத்திய வங்கியின் அதிகாரிகளுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை என்ன? என்றார்.

## நாரா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் சட்டம் தனிநபர் பிரேரணையாக கொண்டுவரப்பட்டு அதனை பின்னர் கடற்றொழில் அமைச்சு பொறுப்பேற்றுக் கொண்டது.

கடற்றொழிலாளர்கள் எதிர்ப்பு தெரிவித்தமையால் நாரா நிறுவனத்தின் ஆய்வுக்கு பின்னர் எந்தெந்த பகுதிகளில் செய்யலாம் என்று கூறி தீர்மானிக்கப்பட்டதுடன் அந்த இடங்களில் மென் இழுவைவலைக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.எல்லா இடங்களிலும் வழங்கப்படவில்லை. இருந்தும் உங்களின் கேள்வியை கருத்திலெடுத்து மீளாய்வு செய்கின்றேன் என்றார்.

## தொழில்துறைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இந்நாட்டின் கைத்தொழில் துறையின் அபிவிருத்தி தொடர்பில் அமைச்சர் ரமேஷ் பத்திரன விசேட கவனம் செலுத்தி செயற்பட்டு வருகின்றார். அதன் ஒரு கட்டமாக இந்த தொழில் கண்காட்சியைக் குறிப்பிடலாம். இது நாட்டிலே நடத்தப்படும் மிகப்பெரிய கண்காட்சியாகும்.

கடந்த காலத்தில் நமது நாடு வங்குரோத்தடைந்த நாடாக மாறியிருந்தது. ஆனால் அடுத்த சில வாரங்களில் நாம் வங்குரோத்தடைந்த நாடு என்ற அவப்பெயரில் இருந்து முற்றிலும் விடுபடுவோம். இது தொடர்பான ஒப்பந்தமும் அடுத்த சில வாரங்களில் எட்டப்பட உள்ளது. இதன்மூலம், தனியார் கடனாளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது எளிதாகிறது. எனவே இந்த பணியை இரண்டு ஆண்டுகளில் மேற்கொள்வோம்.

ஆனால் இதில் மட்டும் திருப்தி அடைய முடியாது. இந்தக் கடனை எவ்வாறு திருப்பிச் செலுத்துவது என்பதில் கவனம் செலுத்த வேண்டும். பல வருடங்களுக்கு முன்னர் பெற்ற கடனை மீளச் செலுத்த வேண்டியுள்ளது. அதற்கு 2042 வரை கால அவகாசம் கிடைக்கும் என நம்புகிறேன்.

இறக்குமதிப் பொருளாதாரம் காணப்படுவதால் இறக்குமதிக்கு பணம் கொடுக்க வேண்டும். அதற்கான அந்நியச் செலாவணி நம்மிடம் இல்லை. அதனால் அவர்கள் மீண்டும் கடன் வாங்க வேண்டும். இந்த முறை அமுல்படுத்தப்பட்டால் இன்னும் 15-20 ஆண்டுகளில் மீண்டும் பொருளாதார நெருக்கடியைச் சந்திக்க வேண்டியிருக்கும். எனவே, ஏற்றுமதி பொருளாதாரமாக மாற்றும் நோக்கில் செயல்பட்டு வருகிறோம்.

ஏற்றுமதிப் பொருளாதாரத்திற்கு மாறுவதில், உற்பத்திப் பொருளாதாரம் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. உருவாக்கப்படும் பொருளாதாரம் போட்டித்தன்மையுடன் டிஜிட்டல் பொருளாதாரமாகவும் இருக்க வேண்டும். மேலும், பூஜ்ஜிய காபன் உமிழ்வு என்ற இலக்கை நோக்கி நகர்வதில் பசுமைப் பொருளாதாரமாக மாற்ற வேண்டும். இந்த கட்டமைப்பிற்குள் நாம் செயல்பட வேண்டும்.

முதல் பணியாக, அந்தத் திட்டங்களின்படி தற்போதுள்ள தொழில்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். ஒரே இரவில் யாராலும் போட்டித்தன்மையை உருவாக்க முடியாது. நமது அண்டை நாடான இந்தியா தற்போது பெரும் கைத்தொழில்துறையில் பெரும் முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. தமிழ்நாடு, தெலுங்கானா, ஆந்திரா ஆகிய மாநிலங்கள் இதே வளர்ச்சியைக் கண்டுள்ளன. நாமும் அதனுடன் இணைந்திருக்க வேண்டும்.

மேலும் இந்த விஷயத்தில் உலகின் மற்ற நாடுகளுடன் இணைந்து செயல்படுவோம் என்று நம்புகிறோம். எனவே, முதலில் செய்ய வேண்டியது தொழில்களை போட்டி நிலைக்கு கொண்டு வர வேண்டும். அதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்குத் தேவையான நிதியை வழங்க அபிவிருத்தி வங்கி ஒன்றை நிறுவுவது குறித்து ஆலோசிக்கிறோம். 1960 இல் எம்மிடம் ம்ய்ளீளீ வங்கி இருந்தது. 1980 இல், ஹிம்ய வங்கி நிறுவப்பட்டது. தனியார் மயமாக்கலுக்குப் பிறகு, இந்த இரண்டு வங்கிகளும் நம் நாட்டில் பெரிய வணிக வங்கிகளாக மாறிவிட்டன. குறிப்பாக இந்த வங்கிகள் அப்போது இல்லாவிட்டால் மறைந்த முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் 200 ஆடைத் தொழிற்சாலைகள் வேலைத்திட்டம் வெற்றியடைந்திருக்காது. எனவே, புதிய வங்கியொன்றை தொடங்க எதிர்பார்க்கிறோம்.

அதற்குள் வட்டி விகிதத்தை குறைந்த மட்டத்தில் பேண வேண்டும். மேலும், இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல பொருளாதார ஆணைக்குவொன்றும் ஸ்தாபிக்கப்படும். மற்ற நடுத்தர மற்றும் சிறிய அளவிலான வர்த்தகர்களுக்காக 'என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா' என்ற புதிய அமைப்பை ஸ்தாபிக்க எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிறுவன அமைப்பு இந்த நாட்டில் உள்ள அனைத்து தொழிலதிபர்களுக்காக உருவாக்கப்பட்டது. அடுத்த 5 - 10 ஆண்டுகளில், இதே வழியில் நாம் முன்னேற வேண்டும்.

பங்களாதேஷ், மியான்மர் போன்ற நாடுகளுக்குச் சென்று அங்கு உற்பத்தியை மேற்கொள்ள விரும்பினால், எதிர்காலத்தில் அதற்கான வாய்ப்பைப் பெறலாம். இதுவே எமது கொள்கை. இந்த செயற்பாடுகளின் போது, இந்தியாவுடன் இணைந்து செயற்படுகின்றோம். இது தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடியுடன் கலந்துரையாடியுள்ளேன். அதேபோல், நாளைய தினம் இந்திய வெளிவிவகார அமைச்சருடனும் கலந்தாலோசிக்கவுள்ளோம்.

நாட்டில் சூரிய சக்தி மற்றும் காற்றாலை மின்சாரத்தைப் பயன்படுத்துவதற்கும், பசுமை ஹைட்ரஜனைப் பெறுவதற்கும் இந்தியா ஒத்துழைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். வடக்கு கடல் பரப்பைக் கொண்டு அந்த நன்மையை அடைவோம். அதன் முதல் படியாக அதானி இலங்கை வந்தார். இதுபோன்று புதிய பாதையில் நாம் பயணிக்க வேண்டும்.

நாட்டில் சிலர் ஒவ்வொரு விடயத்துக்காவும் நீதிமன்றம் செல்கின்றனர். அதனால் சட்டத்தரணிகள் மட்டுமே பயன் பெறுவார்கள். நீதிமன்றத்திற்கு செல்வதால் மட்டும் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது. எமது தேசிய கொள்கையின் படி நாம் முன்னேற வேண்டும். இத்தொழில்களின் முன்னேற்றத்திற்காக புதிய வேலைத்திட்டம் ஒன்றை கலந்துரையாடி தயாரிக்குமாறு தொழில் அமைச்சருக்கு நான் ஆலோசனை வழங்கியுள்ளேன். அந்த செயற்பாடுகளை வலுப்படுத்தும் வகையில் பொருளாதார மாற்ற சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறோம்' என்றார்.

# குறைநிரப்பு மதிப்பீடு 875 கோடி ரூபாய்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசினால் 2024 ஆம் ஆண்டுக்கான குறை நிரப்பு மதிப்பீடாக 875 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று அரச தரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்கவினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட குறை நிரப்பு மதிப்பீட்டில் இத்தொகை குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக நிலவும் பொருளாதார நெருக்கடியின் விளைவாகவும், வெளிநாட்டு உதவியுடன் தொடங்கப்பட்ட சில அபிவிருத்தித் திட்டங்களை கடன் மறுசீரமைப்பு செயன்முறை முடியும் வரை நிறுத்த வேண்டியதாலும், கிராம மட்டத்தில் செயற்படுத்தப்படவிருந்த அபிவிருத்தித் திட்டங்களின் பயன்களை கிராமப்புற சமூகங்கள் இழந்துள்ளன.

கிராமிய பாதைகள், பாலங்கள், சிறு குளங்கள், கால்வாய்கள் அபிவிருத்தி, கிராமிய தொழில் முயற்சி அபிருத்தித் திட்டங்கள், கிராமிய பாடசாலைகள், மருத்துவமனைகள், குறைந்த வருமானம் கொண்ட வீடுகள் மற்றும் கிராமிய நீர் வழங்கல் அபிவிருத்தித் திட்டங்களை எவ்வித தாமதமுமின்றி நிறைவேற்றக் கோரி கிராமப்புற மக்களிடமிருந்தும், பல்வேறு மக்கள் பிரதிநிதிகளிடமிருந்தும் பல்வேறு முறையீடுகள் பெறப்படுகின்றன.

இந்த அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை விரைவாக முடிப்பதற்காக, கருத்திட்டம் 6 'தேசிய முன்னுரிமைகளுக்கான தேசிய அளவிலான வழிகாட்டுதல் மற்றும் ஒருங்கிணைப்பு', நிகழ்ச்சித்திட்டம் 2 - செலவினத் தலைப்பு 001 இன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், உப கருத்திட்ட இல. 003 இற்கு ஏனைய நோக்கக் குறியீடுகளின் சேமிப்புக்களிலிருந்து ரூபா 875 கோடி ரூபா எதிர்பார்க்கப்படுகிறது.

மொத்த அரசசெலவுகள், வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை மற்றும் அரச கடன்கள் ஆகியவற்றில் எந்தவிதமான பாதகமான விளைவையும் ஏற்படுத்தாமல் இந்தப் பரிமாற்றத்தை செயல்படுத்தும் நோக்கத்துடன், உப கருத்திட்டங்களுக்கு ஒதுக்கப்படுகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை உப கருத்திட்டங்களாக, மாகாணசபைகள் ஊடாக அபிவிருத்தி, இலங்கையின் தேசிய முத்திரை, அனுராதபுரம் மகா விகாரை பல்கலைக்கழகத்தை நிறுவுதல் , அனுராதபுரத்தில் சர்வதேச பௌத்த நூலகம் ஒன்றை நிறுவுதல், கண்டியில் பௌத்த நாகரிகம் தொடர்பான அருங்காட்சியகத்தை நிறுவுதல் ,ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை மேம்படுத்துதல் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன.







# ரூ. 35 மில்லியன் செலவில் மண்முனைவப்பற்றில் பல மணல் வீதிகள் கிரவல் வீதிகளாக மாறின



'மணல்வீதிகளற்றகிராமங்கள்'எனும்கருத்திட்டத்திற்கு அமைவாக கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ. சந்திரகாந்தனின் 35 மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யக்கூடிய மிக முக்கிய மணல் வீதிகள் கிரவல் வீதிகளாக செப்பனிடபட்டுள்ளன.



அந்த வகையில் கிரவல் வீதிகளாக செப்பனிடப்பட்ட வேடுவர் குடியிருப்பு வீட்டுத்திட்ட வீதி மற்றும் புதுக்குடியிருப்பு புளியடி ஐந்தாம் குறுக்கு வீதி என்பன கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவ.சந்திரகாந்தனால்செவ்வாய்க்கிழமைவைபவரீதியாக மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது .

இந்நிகழ்வுகளில் மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் தட்சனா கௌரி தினேஷ், பிரதேச சபை செயலாளர் சர்வேஸ்வரன், தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் பொதுச்செயலாளரும், முன்னாள் மாகாண சபை உறுப்பினரும், கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்கஅமைச்சின்பிரத்தியேக செயலாளருமான பூ.பிரசாந்தன், கட்சியின்கல்விகலைகலாசாரபிரிவு செயலாளர்மணிசேகரன், கட்சியின் மண்முனை பற்று பிரதேசக் குழு தலைவர் ஜேக்கப், செயலாளர் கிரீஸ்கந்த முதலி, தொழிற்சங்க செயலாளர் தமிழ்வாணன், உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள், கிராமிய மட்டநிர்வாகிகள், பொதுமக்கள்எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)

# புலமைப் பரிசில் வழிகாட்டி நூல்கள் பாடசாலை மாணவருக்கு கையளிப்பு





(ஹஸ்பர் ஏ.எச்)

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் பெறுபேறுகளை உயர்த்தும் நோக்கோடு திருகோணமலை பட்டணமும் சூழலும் கோட்டத்தில் உள்ள பட்டணத் தெரு, வீரநகர், திருக்கடலூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஐந்தாம் வகுப்பு படிக்கும் மாணவர் ஒவ்வொருவருக்கும் தலா 1930



ரூபா விலையான ஆற்றல் என்னும் புலமைப்பரிசில் தேர்வு வழிகாட்டி நூல்கள் செவ்வாய்க்கிழமை விக்கினேஸ்வரா, புனித சவேரியார் மற்றும் நாமகள் பாடசாலைகளில் வைத்து திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தால் வழங்கப்பட்டது.

இந் நூல்களை திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் கதிரவேலு சண்முகம் குகதாசன், செயலாளர் கணபதிப்பிள்ளை சிவானந்தன் ஆகியோர் வழங்கி வைத்தனர்.

இதில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றார்கள் என பலரும் கலந்து கொண்டனர்.(05)



# மாஸ்டர் தடகள சாம்பியன்ஷிப்பில் றிஸ்மி மஜீடுக்கு இரு பதக்கங்கள்



கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் தங்கப் பதக்கத்தை தனதாக்கிக் கொண்ட கல்முனை அல்-மிஸ்பாஹ் பாடசாலையின் சிரேஸ்ட உடற்கல்வி ஆசிரியர் றிஸ்மி மஜீத் மீண்டும் நடைபெற்று முடிந்த 37 ஆவது வருடாந்த மாஸ்டர் (திறந்த) சம்பியன்ஸிப் - 2024 போட்டியில் 100 மீற்றர் ஹேடில்ஸ் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் உயரம்பாய்தலில் வெண்கலப் பதக்கத்தையும் தனதாக்கிக் கொண்டுள்ளார்.




இதேவேளை கடந்த வருடம் மாஸ்டர் தடகள சாம்பியன்ஷிப் - 2023 போட்டியிலும் இவர் 400 மீற்றர் தடைதாண்டல் ஓட்டப் போட்டியில் பங்கு பற்றி மூன்றாமிடம் பெற்று வெண்கலப் பதக்கத்தை தனதாக்கிக் கொண்டார்.

கடந்த வருடம் 15.07.2023, 16.07.2023 ஆம் திகதிகளில் அனுராதபுர பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் பங்குயிருந்ததோடு, இவர் மிகச் சிறப்பாக தனது திறமையை வெளிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவரைப்பாராட்டி பலரும் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்து வரும் நிலையில் கல்முனை அல் - மிஸ்பாஹ் மகா வித்தியாலயத்துக்கு கடந்த வாரம் வருகை தந்த இலங்கைகிரிக்கெட் அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் ரொஷான் மஹானாமவால் இவ்வாசிரியர் பாராட்டி கௌரவிக்கப்பட்டதோடு பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர், விளையாட்டு ஆசிரியர்கள் பாடசாலை மாணவர்களாலும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# சுவாமி விபுலானந்தர் பிறந்த வீட்டிற்கு சந்நிதியான் யாத்திரைக் குழு வருகை



(வி.ரி. சகாதேவராஜா)

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் பிறந்த காரைதீவு இல்லத்தை முதல் தடவையாக



யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த சந்நதி கதிர்காம பாதயாத்திரை குழுவினர் தரிசித்தனர்.

பாதயாத்திரை குழுவின் தலைவர் ஜெயாவேல்சாமி, சுவாமிகளின் திருவுருவச்சிலைக்கு அருகில் தமது பிரதானவேலை வைத்து வணங்கினார். பின்னர் பஞ்சாராத்தி காட்டி ஆராதனையில் ஈடுபட்டார்கள். அனைத்து அடியார்களும் அங்கு பக்தி பரவசமாக சுவாமியை வழிபட்டார்கள்.

சுவாமியை பிறந்த இல்லத்தை பார்வையிட்டு சில நிமிட நேரம் மணிமண்டபத்தில் தரித்து சென்றார்கள்.

வாழ்க்கையில் முதல் தடவையாக ஒரு பெருந் துறவியின் இல்லத்தை அவரது துறவற நூற்றாண்டு விழா காலத்தில் பார்க்க நேர்ந்தமை எமது யாத்திரையில் கிடைத்த ஒரு பேறு என்று அடியார்கள் தெரிவித்தார்கள். (05)



# கற்பிட்டியில் வெகு விமர்சையாக இடம்பெற்ற பாரம்பரிய ஹஜ் விழா



(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி சீ லையன்ஸ் விளை யாட்டு கழகம் ஏற்பாடு செய்த ஹஜ் பெருநாள் பாரம்பரிய விளையாட்டு விழாவும் மாபெரும் படகு ஓட்டப் போட்டியும் செவ்வாய்க்கிழமை கற்பிட்டி வன்னிமுந்தல் கடற்க ரையில் சீலையன்ஸ் விளையாட்டு கழகத்தின் தலைவர் ஏ.எம் அன்பாஸ் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது

இந்நிகழ்வின் அதிதிகளாக கற்பிட்டியின் பொலிஸ் அத்தியட்சகர் எஸ் என் சொயிஷா , கற்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டப்யூ.எஸ் எதிரிசிங்க, கற்பிட்டி விஜயா கடற்படை முகாம் உத்தியோகத்தர் ரத்நாயக்க மற்றும் அரச அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

கற்பிட்டியில் நீண்ட நாள்களுக்கு பின்னர் இடம்பெற்ற ஹஜ் பெருநாள் பாரம்பரிய விளையாட்டு விழாவின் போட்டி நிகழ்ச்சிகளில் சிறுவர் முதல் பெரியவர் வரை சகலரும் மிகவும் ஆர்வமாக கலந்து கொண்டு வெற்றி பெற்று பெறுமதியான பரிசுப் பொருள்களையும் , பணப் பரிசில்களையும் பெற்றுக் கொண்டனர். அத்தோடு சுமார் 10 இற்கும் மேற்பட்ட எஞ்சின் வலுக்களை கொண்ட படகு ஓட்டப் போட்டிகள் பார்வையாளர்களை மிகவும் கவர்ந்ததுடன் போட்டிகளை பார்வை இடுவதற்கு பெருந்திரளான பார்வையாளர்கள் சமுகமளித்திருந்தனர். புத்தளம் மாவட்டத்திற்கு வெளியில் இருந்தும் பலபடகுகள் கற்பிட்டியில் இடம்பெற்ற படகு போட்டிக்கு வந்திருந்ததையும் காணமுடிந்தது. (05)







# அரசியல் இருப்பைத் தக்கவைக்க சமூகங்களை பலியாக்கவேண்டாம்

## கலையரசனை சாடும் யஹியாகான்

(பாறுக் ஷிஹான்)

நாடாளுமன்ற அரசியலுக்காக தமிழ் முஸ்லிம் சமூகங்களைக் கூறுபோட எத்தனிக்கும் தேசிய பட்டியல் எம்.பி. தவராசா கலையரசனின் செயற்பாடு வன்மையாக கண்டிக்கத்தக்கது என முஸ்லிம் காங்கிரஸின் பிரதிப் பொருளாளர் ஏ.சி.யஹியாகான் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் கலையரசன் எம்.பியின் துவேஷ கருத்துக்கள் இன மோதல்களை தூண்டும் விதமாக உள்ளதாக சுட்டிக்காட்டி யஹியாகான் - அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

மக்களால் நிராகரிக்கப்பட்டு - தேசியப்பட்டியல் எனும் பின்கதவால் நாடாளுமன்றம் நுழைந்துள்ள கலையரசன் - மக்களின் வாக்குகளால் நாடாளுமன்றம் நுழைய இரு சமுகங்களையும் பிரித்தாழும் கைங்கரியத்தை முன்னெடுத்து வருகின்றார்.

அரசியலில் வங்குரோத்து நிலையை அடைந்துள்ள கலையரசன் எம்.பி - தமிழ், முஸ்லிம் மோதலை தூண்டிவிட எடுத்த முயற்சியை - தமிழ் மக்களே முன்னின்று தகர்த்தெறிந்தமை கடந்தகால வரலாறு. அதாவது , கடந்த நாடாளுமன்ற தேர்தலில் படு தோல்வியை தமிழ் மக்கள் அவருக்கு வழங்கினர்.

கருணா வந்ததால்தான் - அம்பாறை மாவட்ட தமிழ் பிரதிநித்துவம் பறிபோனது என்று நொண்டிச்சாட்டைக் கூறினாலும் - கலையரசனின் துவேஷ கருத்துக்களே அவரை தோற்கடிக்கவைத்தன என்ற உண்மையை தமிழ் மக்களே இன்று பகிரங்கமாக கூற முனைந்துள்ளனர்.

இதேபோல்தான் , அம்பாறை மாவட்ட எம்.பியாக இருந்த கோடீஸ்வரனுக்கும் ஏற்பட்டது என்பதை இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

தமிழ் - முஸ்லிம் சமூகம் என்றும்போல் இன்றும் இரண்டறக்கலந்து நட்புப்பாராட்டி வாழ்ந்துவருகின்றனர். இதனை குழப்பியடிப்பது இந்த கலையரசன் மற்றும் கோடீஸ்வரனைப் போன்றவர்கள்தான்.

வெளிமாவட்டங்களில் இருந்து இறங்கச்செய்யப்படும் சில இளைஞர்களைக் கொண்டு - துவேஷத்தை விதைத்து அம்பாறை மாவட்ட தமிழ் - முஸ்லிம் உறவில் விரிசலை ஏற்படுத்த கலையரசன் முனைவதை தமிழ் மக்கள் அறியாமலில்லை. இதற்கான தகுந்த பாடம் அடுத்த நாடாளுமன்ற தேர்தலில் கிடைக்கும் என்பதை அவர் புரிந்து வேண்டும்.

எந்தவொரு விடயத்திலும் தீர்வு எட்டப்படும் போது - அது தமிழ் சமூகத்தையும் பாதிக்காத வகையில் எட்டப்பட வேண்டும் என்பதே முஸ்லிம் சமூகத்தின் எதிர்பார்ப்பும் முடிவுமாகும் என்பதை இங்கு கோடிட்டுக் காட்டி - அற்பத்தனமான அரசியலுக்காக இரு இனங்களையும் மோதவிடத் துடிக்கும் கைங்கரியத்தை கலையரசன் கைவிட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். - என்றார். (05)

# களுபோவில வைத்தியசாலை கன்ரீனில் மனித பாவனைக்குதவாத உணவுகள்

களுபோவில போதனா வைத்திய சாலையில் வைத்தியர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள சிற்றுண்டிச் சாலையிலிருந்து மனித பாவனைக்கு உதவாத பல்வேறு உணவுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன என தெஹிவளை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

தெஹிவளை பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே இந்த உணவுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

களுபோவில போதனா வைத்தியசாலையில் உள்ள சிற்றுண்டிச்சாலைகளில் வைத்தியர்களுக்காக ஒதுக்கப் பட்டுள்ள சிற்றுண்டிச்சாலை யொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் மனித பாவனைக்கு உதவாத பரோட்டா ரொட்டி மற்றும் காய்கறிகள் உள்ளிட்ட பல்வேறு உணவுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், அங்கிருந்த உணவு வகைகளில் ஈக்கள் மற்றும் எறும்புகள் உள்ளிட்ட பூச்சிவகைகள் காணப்பட்டன எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து, சிற்றுண்டிச் சாலையிலிருந்த மனித பாவனைக்கு உதவாத அனைத்து உணவுப் பொருட்களும் அழிக்கப்பட்டுள்ளதுடன் சுத்தமான ,பாதுகாப்பான முறையில் உணவுகளைத் தயாரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் தொடர்பில் சிற்றுண்டிச்சாலையின் உரிமையாளர் மற்றும் பணியாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பின்னர், வைத்தியசாலைக்கு அருகில் உள்ள பல்வேறு உணவ கங்கள் மற்றும் சிற்றுண்டிச்சாலைகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில் மனித பாவனைக்கு உதவாத பல்வேறு உணவுப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளதுடன் உரிமையாளர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# கோட்டாபயவின் பாவத்தை ரணில் தூய்மையாக்குகிறார்

## முஜிபூர் ரஹ்மான் சாட்டை




கோட்டபய ராஜபக்ஷ மற்றும் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தின் பாவத்தின் பங்காளியாக ஜனாதிபதி செயற்படுகிறார்.

பொதுஜன பெரமுனவின் தவறை தூய்மைப்படுத்தும் நடவடிக்கையில் இவர் ஈடுபடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

கொவிட் பெருந்தொற்றால் உயிரிழந்தவர்களின் உடல் தகனம் செய்யப்பட்டமை குறித்து ஜனாதிபதி பேசியிருந்தார். துறைசார் நிபுணர்கள் வழங்கிய ஆலோசனைகளுக்கு அமையவே உடல்கள் தகனம் செய்யப்பட்டன என ஜனாதிபதி குறிப்பிடுகிறார்.

கொவிட் பெருந்தொற்றுத் தாக்கத்தில் உயிரிழந்த முஸ்லிம் சமூகத்தினரது ஜனாஸாக்களை தகனம் செய்ய வேண்டாம், சுகாதார அறிவுறுத்தலுக்கு அமைய நல்லடக்கம் செய்யுங்கள் என்று அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் பலமுறை வலியுறுத்தினோம்.

இவ்விடயம் குறித்து ஆராய்வதற்கு தொழில்நுட்ப குழுவும், துறைசார் நிபுணர்களின் குழுவும் நியமிக்கப்பட்டது. தொழில்நுட்பகுழுவில்தலைவராககோட்டாவுக்குநெருக்கமான சன்ன பெரேரா என்பவர் நியமிக்கப்பட்டார்.

இந்த குழுக்களின் மீது நம்பிக்கை இல்லை. ஆகவே துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய குழுவை நியமியுங்கள் என்று அப்போதைய ஜனாதிபதியிடம் வலியுறுத்தினோம். இதற்கமைய கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடாதிபதி ஜெனிபா பெரேரா தலைமையில் துறைசார் குழு நியமிக்கப்பட்டது.

சர்வதேச சுகாதார தாபனம் முன்வைத்துள்ள பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கு அமைய உடல்களை அடக்கம் செய்யலாம் என்று இந்த குழு அறிக்கை சமர்ப்பித்தது. ஆனால் கோட்டாபய ராஜபக்ஷவும், அவரது அமைச்சரவையும் கவனத்திற்கொள்ளவில்லை. இனவாத ரீதியில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைக்கு மாத்திரமே முன்னுரிமை வழங்கினார்.

உலக சுகாதார தாபனம் சமர்ப்பித்த அறிவுறுத்தல்களை புறக்கணித்து முஸ்லிம் சமூகத்தினர் பழிவாங்கப்பட்டார்கள். தற்போது ஜனாதிபதி தொழில்நுட்ப குழுவின் தீர்மானம் என்று குறிப்பிட்டு பொதுஜன பெரமுனவை தூய்மைப்படுத்த முயற்சிக்கிறார். பொதுஜன பெரமுனவின் ஆதரவில் இருப்பதால் இவரும் பாவத்தில் பங்காளியாகியுள்ளார். - என்றார். (05)

# தேரரை பாலியல் ரீதியாக துன்புறுத்திய மற்றொரு தேரர் அனுராதபுரத்தில் கைது

அநுராதபுரம் பிரதேசத்தில் 13 வயது தேரரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் தேரர் ஒருவர் கடந்த 16 ஆம் திகதி அநுராதபுரம் தலைமையக பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுரம் நகரத்தில் உள்ள விகாரையொன்றில் வசித்து வந்த 22 வயதுடைய தேரரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளான தேரர் அநுராதபுரம் பிரதேசத்தில் உள்ள மற்றுமொரு விகாரையொன்றில் பணிபுரிந்து வரும் நிலையில் தனிப்பட்ட தேவை காரணமாக முன்னர் பணிபுரிந்த விகாரைக்குச் சென்றிருந்த போதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளான தேரர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட தேரர் அநுராதபுரம் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்தசம்பவம்தொடர்பானமேலதிகவிசாரணைகளை அநுராதபுரம் தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# விலங்குகளை வேட்டையாடி விற்பனை செய்த நபர் கைது

அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோத துப்பாக்கி மூலம் விலங்குகளை வேட்டையாடி விற்பனை மோசடியில் ஈடுபட்ட நபர் துப்பாக்கி மற்றும் ரவைகளுடன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியைஅனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக வைத்திருப்பதாக வண்ணாத்திவில்லு பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய நேற்று (செவ்வாய்க்கிழமை) மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வண்ணாத்திவில்லு கரடிப்புவல் பகுதியைச் சேர்ந்த 54 வயதுடையவரென பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சந்தேக நபர் துப்பாக்கியைப் பயன்படுத்தி காட்டுவிலங்குகளை வேட்டையாடி விற்பனை செய்யும் மோசடியில் ஈடுபட்டுவந்துள்ளதாகப் பொலிஸார் சந்தேகிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

வண்ணாத்திவில்லு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு கிடைக்கெப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய சந்தேகநபரின் வீட்டை பொலிஸார் சுற்றிவளைத்த போது, கையில் துப்பாக்கியுடன் வீட்டை விட்டு வெளியேற முற்பட்ட போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்எனத்தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பில் வண்ணாத்திவில்லு பிரதான பொலிஸ் பரிசோதகர் சுமுது சேனநாயக்கவின் பணிப்புரையின் பேரில் உப பொலிஸ் பரிசோதகர் சேனகபண்டாரவின்தலைமையில் பொலிஸ் சார்ஜன்ட்களான வான் ராஜபக்ஷ, சமன், பொலிஸ் கான்ஸ்டபிள்கள் சேரசிங்க, சமீர ஆகியோர் இணைந்து சுற்றிவளைப்பில் ஈடுபட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும் கைப்பற்றப்பட்ட துப்பாக்கி மற்றும் ரவைகள் புத்தளம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக வண்ணாத்திவில்லு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(05)

# சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக தடுப்புப் பணியகம் மருதங்கேணியில்





யாழ்ப்பாணம் – வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் புதிதாக சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக தடுப்பு பணியகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த பணியகத்தின் திறப்பு விழா நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்றுள்ளது.

மருதங்கேணி பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் காங்கேசன்துறை பொலிஸ் கண்காணிப்பாளர் சந்தனகமகே கலந்துகொண்டு புதிதாக கட்டப்பட்ட சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோக தடுப்பு பணியகத்தைத் திறந்து வைத்துள்ளார்.

அத்துடன், பருத்தித்துறை பொலிஸ் நிலையத்துடன் இணைக்கப்பட்டிருந்தவடமராட்சிகிழக்கின்வலிக்கண்டி முதல் குடாரப்பு வரையான 8 கிராம சேவகர் பிரிவுகளும் சில மாதங்களுக்கு முன்னர் மருதங்கேணி பொலிஸ் நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த கிராம சேவகர் பிரிவுகள் வழமை போன்று பருத்தித்துறை நீதிமன்றத்துடன் இணைக்கப்பட்டு கிளிநொச்சி பொலிஸ் அத்தியட்சகர் பிரிவிலிருந்துமாற்றப்பட்டுதற்போதுபருத்தித்துறைஉதவி பொலிஸ்அத்தியட்சகர்பிரிவுடன்இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த நிகழ்வில் அச்சுவேலி, தெல்லிப்பழை, வல்வெட்டித்துறை, இளவாலை, நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரிகள், வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச தலைவர் த.தங்கரூபன், பொலிஸ் பாதுகாப்பு குழுவினர் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர், கிராம சேவகர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டுள்ளனர். (05)

# விபத்தில் ஒருவர் படுகாயம்



(எஸ்.அஷ்ரப்கான்)

அம்பாறை, அக்கரைப்பற்று பொலிஸ்பிரிவுக்குஉட்பட்டஒலுவில், தென்கிழக்கு பல்கலைக்கழகம் முன்பாக பிரதான வீதியில் திங்கட்கிழமை இரவு 07.45 மணியளவில் கல்முனை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் துவிச்சக்கரவண்டியுடன்மோதியதில் விபத்துக்குள்ளானது.

இச்சம்பவத்தில்படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் மற்றும் மேலும் இருவர் காயங்களுடன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

மோட்டார் வாகனத்தில் வந்த நபர் மதுபோதையில் இருக்கலாம் எனசந்தேகிக்கப்படுகின்றநிலையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த அக்கரைப்பற்றுபொலிஸார்மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

## பாலமுனைக் கிராமத்தில் சகவாழ்வு சங்கம் ஆரம்பம்





(எம்.எ.நவாஸ்)

நீதி அமைச்சின் தேசிய ஒருமைப்பாட்டுபிரிவால்கிராமங்கள் தோறும் சகவாழ்வுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் இர்பானின் வழிகாட்டலில் உதவி பிரதேச செயலாளர் கு.நஹீஜா முஷாபிர் (சட்டத்தரணி) ஆலோசனையில் தேசிய ஒருமைப்பாட்டுஅபிவிருத்தி உத்தியோகத்தர் றிஸான் நெறிப்படுத்தலில் பாலமுனை (திராய்க்கேனி) பிரிவுக்கான சகவாழ்வுச்சங்கம் 18.06.2024 ஆரம்பிக்கப்பட்டுநிர்வாகத்தெரிவும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கிராமசேவகர் இப்றாஹிம் மற்றும் கிராமத்தின் முஸ்லிம்மற்றும்தமிழ்சகோதரர்கள் பங்கேற்றனர். (05)

## இந்திய அரசால் மன்னாரில் உலர் உணவு விநியோகம்





இலங்கை-இந்தியநல்லுறவை மேம்படுத்தும் வகையில் ஹஜ் பெருநாளைமுன்னிட்டுமன்னாரில் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மன்னார் மற்றும் முசலி பிரதேச செயலக பிரிவை சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு திங்கட்கிழமை குறித்த உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

மன்னார் அல் - அஸ்ஹர்



தேசிய பாடசாலையில் வைத்து 78 குடும்பங்களுக்கும் முசலி தேசிய பாடசாலையில் வைத்து 80 குடும்பங்களுக்கும் பத்தாயிரம் ரூபா பெறுமதியான இந்த உலர் உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்திய துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில்இலங்கைக்கான இந்திய துணைத் தூதுவர் சாய்முரளி தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றுள்ளது.

அதேவேளை, இந்நிகழ்வில் இந்தியத் தூதரக அதிகாரிகள் பாடசாலை அதிபர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டிருந்தமைகுறிப்பிடத்தக்கது. (05)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.06.2024இல் வெளியிடப்பெற்றது